# மத்தியகிழக் நெருக்கடிக்கு உடனடி தீர்வு இல்லையேல் நாசகார விளைவுகள் ஏற்படும்


Registered as a News peper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

National Tamil Daily

மலர் 11
இதழ்: 110
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் வைகாசி 19 ரபி:அவ் 15 ஞாயிற்றுக்கிழமை [1-6-69]



பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



...ர் கோர்ப்பரேஷன்



முக்கிய அறிவித்தல்

மில்க்வைற் சோப் வாங்குபவர்கட்கு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வீதியில் 2-6-69-ல் எங்கள் விளம்பர வானில் கீழ்க் காணும் பொருட்களை அன்பளிப்பாகக் கொடுக்கின்றோம்.

1. சக்தி வழிபாடு
2. அழகான பிளாஸ்டிக் பை

இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

மில்க்வைற் சோப்
தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.


## கெய்ரோவில் டட்லி எச்சரிக்கை

கெய்ரோ, மே 31

மத்திய கிழக்கு நெருக்கடிக்கு உடனடியாகத் தீர்வுகாணப்படாவிட்டால் நாசகரமான பல விளைவுகளை ஏற்படுத்துமென இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா நேற்று எச்சரித்தார்.

தமது ஐக்கிய அரபுக் குடியரசுச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்புவதற்கு சற்று முன்னதாக நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் பிரதமர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்

'மத்திய கிழக்குப் பிரச்னை எப்போது திடீரென வெடிக்குமென்று சொல்ல முடியாது. அப்பிரச்னைக்கு உடனடி அரசியல் தீர்வுகாணவேண்டும். இல்லாவிட்டால் உலகத்தையே நாசகரமான நிலைமைக்கு இழுத்துச்சென்றுவிடும்' என்று பிரதமர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

இலங்கை முஸ்லிம்கள் நாட்டுக்கு ஆற்றும் பணி குறித்துப் பாராட்டுத் தெரிவித்தார். 'இலங்கையின் வளர்ச்சிக்கு அவர்கள் ஆற்றும் தன்னலமற்ற பணியை மனதாரப் பாராட்டுகிறேன்' என்று குறிப்பிட்டார்.

பிரதமர் டட்லி சேனநாயக்கா நேற்று ஐக்கிய அரபுக்குடியரசு ஜனதிபதி நாஸரைக் கௌரவிக்கு முகமாக விருந்துபசாரமொன்றை அளித்தார். இலங்கைக்கு வரும்படி நாஸருக்கு பிரதமர் விடுத்த அழைப்பை ஜனதிபதி ஏற்றுக்கொண்டார். நாஸர் விஜயம் செய்வதற்கான திகதி குறிப்பிடப்படவில்லை.

# பௌத்த பாடசாலைகள் இன்று பொறுப்பேற்கப்படுகின்றன

## தொடர்ந்து வேலை செய்ய அனுமதி

யாழ்ப்பாணம், சனி

சிங்களத்தேர்ச்சி பெறவில்லையென்று காரணம் காட்டி வேலைநீக்கநோட்டீஸ் வழங்கப்பட்டிருந்த வடபகுதியைச்சேர்ந்த 27 நெசவாசிரியர்களும் தொடர்ந்து வேலை செய்யலாமென்றும் அவர்களுக்கு மேலும் ஒருவருடகால சேவை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் கைத்தொழில் அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

இந்த 27 நெசவாசிரியர்களும் இம்மாதம் 30-ம் திகதிக்கிடையில் தங்கள் பொறுப்புக்களை ஒப்படைத்துவிட்டு வேலையிலிருந்து விலகிவிடவேண்டுமென கிராம அபிவிருத்தி குடிசைக்கைத்தொழில் உதவி அதிபர் அறிவித்திருந்தார்.

நெசவாசிரியர்களுக்குச் சிங்களத்தேர்ச்சிபெறவில்லை வேலைநீக்கநோட்டீஸ் வழங்கப்பட்டிருந்ததை இலங்கை நெசவாசிரியர் சங்கம் ஆட்சேபித்திருந்ததுடன் இவ்விஷயத்தில்நீதிவழங்குமாறு அமைச்சரையும் கேட்டிருந்தது. இது சம்பந்தமாக நெசவாசிரியர்சங்கக் காரியதரிசி திரு. ச. தம்பையா யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மூலம் அமைச்சருடனும்குடிசைக்கைத் தொழில் அதிபருடனும் தொடர்பு கொண்டிருந்தார்.

அமைச்சருடன் திரு. பொன்னம்பலம் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, வேலை நீக்க உத்தரவு நிறுத்தப்பட்டிருப்பதாகவும் மேலும் ஒரு வருட காலத்துக்கு இந்த ஆசிரியர்கள் தொடர்ந்து கடமை யாற்றலாமென்றும் குடிசைக்கைத்தொழில் அதிபருக்கு அமைச்சர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## சிங்கள அதிபர்கள் வந்தால் பகிஷ்கரிப்பார்களாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

**வடபகுதியிலுள்ள மூன்று பௌத்த பாடசாலைகளையும் அரசாங்கம் இன்று உத்தியோக பூர்வமாகப்பொறுப் பேற்கின்றது.**

அல்வாய் ஆனந்த கெமகே வித்தியாலயம், அச்சுவேலி வியாவி வித்தியாலயம், கரவெட்டி ஸ்ரீகாந்த் வித்தியாலயம் ஆகிய மூன்றையும் அரசாங்கம் பொறுப்பேற்கும் வைபவம் இன்றுகாலை நடைபெறுகிறது.

3 பௌத்த பாடசாலைகளையும் யாழ்ப்பாண நாகவிகாரை பிரதம குரு நந்தாராமநாயகாதேரோ தமது குழுவினருடன் சென்று இன்று காலை 8 மணிக்குதேசியக்கொடியை ஏற்றிவைத்து 'பிரித்' ஓதி ஆம்பித்து வைக்கவிருக்கிறார்.

இன்றுகாலையில் அரசாங்கம் பொறுப்பேற்கவிருக்கும் பௌத்தபாடசாலைகள் மூன்றுக்கும் யாழ் நாகவிகாரையின் பிரதம குருவான வண. நந்தாராம நாயகதேரோவும் அவரது குழுவினரும் சென்று பௌத்த கொடியை ஏற்றிவைத்து ஆராதனைகள் செய்வார்கள் நாயகதேரோ 'பிரித்' ஓதுவார். இவர்களுடன் அகில இலங்கை திராவிட பௌத்தகாங்கிரஸ்தலைவர் திரு. ஜே. ஆர், டேவிட்டும் கலந்துகொள்வார்.

அச்சுவேலியிலுள்ள பாடசாலையை கோப்பாய் வட்டாரப்பரிசோதகர் திரு. வி. சண்முகநாதனும், கரவெட்டிப்பகுதியிலுள்ள பாடசாலையை அப்பகுதிப் பரிசோதகரான திரு எஸ். மகேஸ்வரஐயரும், அல்வாயிலுள்ள பாடசாலையை பருத்தித்துறைப்பகுதி பரிசோதகர் திரு. எஸ். கந்தசாமியும் உத்தியோகபூர்வமான முறையில் தமது பொறுப்புகளையும் கடமைகளையும் இப்பாடசாலைகளில் செய்வார்கள். இவர்களிடம் இந்தப் பாடசாலைகளின் பொறுப்புகளை நேற்று முன் தினம் வடபகுதி கல்விஅதிகாரி திரு எஸ். தணிகாசலம் கையளித்தார்.

"சிங்களத்தைப் போதனு மொழியாக்க மாட்டோம்; பாடசாலையிலுள்ள

## பிரதமர் நாடு திரும்பினர்

கோட்டை சனி

பிரதமர் டட்லி சேனநாயக்கா ஐக்கிய அரபுக்குடியரசின் ஐந்து நாள் உத்தியோகபூர்வமான விஜயத்தை முடித்துக்கொண்டு இன்று நண்பகல் 1-10 மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையம் வந்துசேர்ந்தார்.

விமானநிலையத்தில் பிரதமரை மகாதேசாதிபதியும், அமைச்சர்களும், எம். பி.க்களும், பிரமுகர்களும் வரவேற்றனர். விமானநிலையத்தைச் சுற்றி ஆயிரக்கணக்கான மக்கள் கூடி நின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

பிரதமர் விமானநிலையத்தை வந்தடைந்தபோது மழை கடுமையாகப் பெய்துகொண்டிருந்தது. பிரதமருக்கு அணிவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது. பாடசாலை மாணவிகள் கூடி நின்று கீதம்பாடி வரவேற்றனர்.

கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து பிரதமர் ஊர்வலமாக 'ஆட்லண்ட்ஸுக்கு' அழைத்துச்செல்லப்பட்டார். வீதியின் இருமருங்குகளிலும் நூற்றுக்



## சுன்னாகம் மயானத்தில் கிடந்தசடலம்

# கொலையுண்டவரும் கொலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்புக்களை ஒப்படைத்துவிட்டு வேலையிலிருந்து விலகிவிடவேண்டுமென கிராம அபிவிருத்தி குடிசைக்கைத்தொழில் உதவி அதிபர் அறிவித்திருந்தார்.

நெசவாசிரியர்களுக்குச் சிங்களத்தேர்ச்சிபெறவில்லையென்ற காரணம்காட்டி

உத்தரவு நிறுத்தப்பட்டிருப்பதாகவும் மேலும் ஒரு வருட காலத்துக்கு இந்த ஆசிரியர்கள் தொடர்ந்து கடமையாற்றலாமென்றும் குடிசைக்கைத்தொழில் அதிபருக்கு அமைச்சர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கும் ... நடைபெறுகிறது.

'பிரித்' ஓதி ஆம்பித்து வைக்வும் அவரது குழுவினரும

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி இன்று மாலை இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 248-வது சீட்டிழுப்பில் பரிசுபெறும் டிக்கட்டுகள் வருமாறு:-

**முதல் பரிசு**

07 H 0353 ரூ. 100,000

**இரண்டாம் பரிசு**

06 D 0180 ரூ. 40,000

**மூன்றும் பரிசு**

05 D 0219 ரூ. 10,000

தலா ரூபா 522-20 சதம் ஆறுதல் பரிசு பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:-

| | |
|---|---|
| 14 E 0875 | 02 H 0935 |
| 23 W 0669 | 34 D 0715 |
| 10 R 0499 | 30 M 0327 |
| 03 Q 0336 | 02 H 0636 |
| 09 W 0586 | 28 H 0531 |
| 04 D 0893 | 17 H 0185 |
| 28 L 0959 | 01 K 0547 |
| 39 V 0835 | 19 V 0240 |
| 20 T 0191 | 32 J 0336 |
| 39 A 0800 | 28 U 0026 |
| 18 E 0422 | 35 V 0495 |
| 04 L 0065 | 30 X 0083 |
| 22 D 0124 | 30 J 0588 |
| 31 Y 0421 | 10 O 0944 |
| 32 P 0919 | |
| 19 P 0319 | 36 R 0792 |
| 20 P 0167 | 22 M 0535 |

| | |
|---|---|
| 36 N 0395 | 09 K 0305 |
| 11 S 0762 | 28 N 0938 |
| 38 T 0204 | 16 M 0383 |
| 40 A 0325 | 36 V 0928 |
| 43 A 0309 | 15 P 0312 |
| 30 E 0048 | 40 D 0551 |
| 27 S 0121 | 09 G 0111 |
| 09 R 0007 | 08 Z 0317 |
| 34 T 0224 | 15 Q 0277 |
| 09 M 0688 | 24 X 0296 |
| 30 L 0956 | 15 S 0963 |
| 32 G 0483 | 43 R 0017 |
| 43 M 0484 | 05 U 0146 |
| 01 C 0552 | 26 X 0499 |
| 08 H 0483 | 25 P 0827 |
| 29 Z 0471 | 16 G 0492 |
| 25 X 0158 | 15 W 0039 |
| 08 F 0630 | 18 Z 0908 |
| 08 L 0770 | 07 S 0684 |
| 26 G 0061 | 30 W 0842 |
| 20 A 0623 | 07 K 0215 |
| 25 P 0734 | 33 P 0806 |
| 06 D 0618 | 30 J 0707 |
| 08 N 0139 | 14 K 0560 |
| 38 K 0933 | 31 L 0443 |
| 13 V 0296 | 24 J 0556 |
| 37 X 0581 | 20 [illegible] 0917 |
| 16 X 0898 | 29 N 0976 |
| 01 K 0957 | 22 C 0428 |
| 22 Q 0459 | 10 M 0944 |
| 01 F 0855 | 38 M 0278 |
| 37 K 0500 | 08 J 0573 |
| 01 S 0207 | 15 D 0547 |
| 02 M 0677 | |

(இவை உறுதிப்படுத்தப்படவேண்டியவை)

சுன்ஞகம் மயானத்தில் கிடந்தசடலம்

# கொலையுண்டவரும் கொலைகாரரும் யாழ். நகரவாசிகளா?

யாழ்ப்பாணம், ஞாயிறு சுன்ஞகம் மயானத்தில் சில தினங்களுக்கு முன் கருகிய நிலையில் கிடந்த சடலம் சம்பந்தமாக புலன் விசாரணைசெய்துவரும் சுன்ஞகம் பொலிசார் தங்களது விசாரணை ஓரளவுபயனளித்திருப்பதாகவும் இன்றே நாளையோ கொலையுண்டவர் பற்றிய தகவலைத்தெரிவிப்பதுடன் கொலையில் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடிக்கவும் கூடுமென்றும் தெரிவிக்கின்றனர்.

சுன்ஞகம் மயானத்தில் கிடந்த இளைஞன் சம்பந்தப்பட்ட கொலையும் அச்சுவேலிக்குச் சமீபத்தில் தாழம்பற்றையில் கொலையுண்டு கிடந்த ஒன்பது வயதுச் சிறுவனின் கொலையும் திட்ட மிட்ட கொலைகளென்றும் இதுவரை வடமாகாணத்தில் இப்படித் திட்டமிட்ட கோரக்கொலைகள் நடந்ததாகத் தெரியவில்லையென்றும் வடபகுதி பொலிஸ் அதிபர் தெரிவித்தார்.

சுன்ஞகம் மயானத்தில் கருகியநிலையில்காணப்பட்ட சடலத்திற்கருகில் கிடந்த சில துணிகளின் சலவை அடையாளத்திலிருந்து அந்த இளைஞன் யார் என்பதைக் கண்டுபிடிக்கக்கூடியதாக இருக்கிறதென்றும் பொலிசார் தெரிவித்தனர்.

கொலையுண்ட இளைஞனும் கொலையில் சம்பந்தப்பட்டவர்களும் யாழ்ப்பாண நகரைச் சேர்ந்தவர்களாக இருக்கலாமெனப் பொலிசார் இதுவரை கிடைத்த தகவல்களிலிருந்து அறிந்துள்ளனர்.

ஆலயப்பிரவேசப் பிரச்னை

# தடையை நீக்கமுடியுமா; பொலிசாரின் நிலைஎன்ன?

## அட்டர்ணிஜெனரல் 5-ந் திகதி தெரிவிப்பார்

யாழ்ப்பாணம், ஞாயிறு ஆலயப்பிரவேச முயற்சி பற்றியும் அதைத்தடுப்பதற்காக எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் பற்றியும் பொலிஸ் அதிபர் கேட்டிருந்த சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு அட்டோர்னி ஜெனரல் இம்மாதம் 5-ம் திகதி விளக்கம் கொடுக்கவிருக்கிறர்.

மாவிட்டபுரம் ஆலயத் திருவிழா விரைவில் ஆரம்பமாகவிருப்பதை யொட்டியே இப்பிரச்னைக்கு விரைவில் ஒரு முடிவுகாணவேண்டிய நிலைமை தோன்றியுள்ளதாம்.

ஆலயப் பிரவேசத்தைத் தடுப்பதற்காகஆலயங்களின் முட்கம்பிவேலிபோடப்பட்டிருந்தால் அவற்றை அகற்றுவதற்குப் பொலிசாருக்கு அதிகாரமிருக்கிறதா; முட்கம்பிவேலியைத் தாண்டி யாரும் சென்ருல் அவரைத் தடைசெய்து அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியுமா, எல்லோரையும் வெளியில் நிறுத்திவிட்டு, கோயில் குருக்கள்மாரும், தொண்டர்களும் மட்டும் ஆலயத்தினுள்ளிருக்க சட்டம் இடம்கொடுக்கிறதா?

இவைகளுக்கொல்லாம் இம்மாதம்5ந்திகதி பொலிஸ் அதிபருக்குப் பதில் கொடுப்பாரென்றும் இதைத்தொடர்ந்து அன்றே வடமாகாணப் பொலிஸ் அதிபரும் பொலிஸ் அதிபர் வடபகுதியில் ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பதென்பது பற்றி ஆலோசித்து முடிவு செய்வார்ளென்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

ஈழநாடு 10-வது ஆண்டு நிறைவு விழா

# ஆடற்கலைக்கு அழகூட்டும ஆரணங்குகளின் அற்புத நடனம் காண்பேம் வாரீர்!

## வாருங்கள்! பாருங்கள்!! மகிழுங்கள்!!!

யாழ்ப்பாணம், ஞாயிறு ஆடற்கலைக்கு அழகூட்டும் அற்புத நங்கைகளின் ஆனந்த பரவசமான நடனங்களை ஒரே மேடையில் ஒரேவேளையில் கண்டுகளிக்கும் ஓர் அரிய சந்தர்ப்பத்தை 'ஈழநாடு' ஸ்தாபனத்தார் கலாரசிகர்களுக்கு அளிக்கின்ருர்கள்.

யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த 5 கல்லூரிகளைச் சேர்ந்த கலைச் செல்விகள் அளிக்கும் இந்த நடன நிகழ்ச்சியை இம்மாதம் 14ந் திகதி யாழ்ப்பாணத் திறந்தவெளியரங்கில் நடைபெறும் 'ஈழநாடு'பத்தாவது ஆண்டு கலைவிழாவில் காணபெறும்.

ஏற்கனவே இந்த நடன நிகழ்ச்சியில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆகியனவே கலந்துகொள்ளவிருந்தன. ஆனல் இப்பொழுது சுன்ஞகம் இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியனவும் இந்நிகழ்ச்சியில் இப்போது கலந்துகொள்ளவிருக்கின்றன.

5 மகளிர் கல்லூரிகளும் ஒன்ருகக் கூடுகின்றன. ஒன்றரை மணி நேரம் அலாரிப்பு, ஜதீஸ்வரம், கும்மி, தில்லாஞ, குறவன் குறத்தி போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளைக் காட்டவிருக்கின்ருர்கள். ஆடலழகிகளின் இந்த அற்புத நடனங்களைக் கண்டுகளிக்க இம்மாதம் 14ந் திகதி மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணத் திறந்தவெளியரங்கிற்கு வாருங்கள்.

கண்ணுக்கு விருந்தளிக்க நாட்டியம். கருத்துக்கு விருந்தளிக்க நாடகம். காதுக்கு விருந்தளிக்க மெல்லிசை.

இம்மாதம் 14ந் திகதி யாழ்ப்பாணத் திறந்தவெளியரங்கிற்குத் திரண்டுவாருங்கள். பார்த்து மகிழுங்கள், 'ஈழநாடு கலைவிழாவை.

(கா.நி)

... பொறுப்புகளை நேற்று முன்தினம் வடபகுதி கல்விஅதிகாரி திரு எஸ். தணிகாசலம் கையளித்தார்.

"சிங்களத்தைப் போதனமொழியாக்க மாட்டோம்; பாடசாலையிலுள்ள பெற்றேர்கள்சிங்களத்தைத்தான் போதனமொழியாக்க

(4-ம் பக்கம் பார்க்க)

...றனர்.

கட்டுநாயக்கா விமான நிலயத்திலிருந்து பிரதமர் ஊர்வலமாக 'ஆட்லண்ட் ஸுக்கு' அழைத்துச்செல்லப்பட்டார். வீதியின் இரு மருங்குகளிலும் நூற்றுக்கணக்கான மக்கள் கூடிநின்று பிரதமரை வரவேற்றனர்.



# 'தீண்டாமையை ஒழிக்க ஓர் ஆணைக்குழு நியமிக்குக'

## சர்வகட்சி மகாநாட்டில் அரசாங்கத்தை கோரும் தீர்மானம்

யாழ்ப்பாணம். ஞாயிறு தமிழ் மக்களிடையே நிலவும் சாதி வேற்றுமையை, அதனல்வரும் ஏற்ற தாழ்வுகளை, அநீதிகளை, பின்தங்கியநிலைகளை ஆராய்ந்து நீக்க சிபார்சு செய்வதற்கு ஓர் ஆலோசனைக் குழு நியமிக்கும்படி அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் நேற்றுக்காலை யாழ்ப்பாணத்தில் நடந்த சர்வகட்சி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

தமிழரசு பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் கூட்டிய இம்மகாநாட்டில், புரட்சிவாத சமசமாஜக்கட்சிதவிர எந்தஅரசியல் கட்சிகளும் கலந்துகொள்ளவில்லை. யாழ்ப்பாணமாநகரசபை ஆலோசனை மண்டபத்தில் இம்மகாநாடு நடைபெற்றது.

சிறுபான்மைத்தமிழர் ஐக்கியமுன்னணித் தலைவர் திரு. பி. கதிரவேலும், மக்கள் முன்னேற்ற மன்ற சார்பில் திரு. கே. நடராசாவும் மற்றும் சிறுபான்மைச் சமூகப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். யாழ் நகரமேயர் திரு. எஸ். நாகராசா தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் திரு. ஏ. அமிர்தலிங்கம் (எம், பி.) பருத்தித்துறை எம். பி. திரு, க. துரைரத்தினம், கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, சாவகச்சேரி எம்.பி. திரு. வி.என். நவரத்தினம், உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், செனட்டர் எஸ். நடராசா உட்பட சுமார் 30 பேர் கலந்துகொண்டனர்.

புரட்சிவாத சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு. வி, எம். பொன்னையா, திரு. எஸ். விவேகானந்தன் ஆகியோரும், யாழ். பெற்றேர் சங்கத்தலைவர் திரு. கு. நேசையாவும், இந்து மாமன்றஆலயப் பிரவேசகுழுச் செயலாளர் திரு. எம். பொன்னையா, யாழ்மாநகர சபை உறுப்பினர் திரு. என். ரி. செல்லத்துரை, ஆசிரியர் திரு. ஐயாத்தம்பி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஈழத்தமிழ்இளைஞர் இயக்கத்தலைவர் திரு. இலங்கை மன்னனும் கலந்துகொண்டார்.

(4- பக்கம் பார்க்க)

# 'தீண்டாமை ஒழிந்தால் மட்டும் போதாது'

## — கோப்பாய் எம்.பி

யாழ்ப்பாணம், ஞாயிறு "தீண்டாமையை ஒழித்தால் மட்டும் போதாது. சாதியையும் ஒழிக்கவேணடும். சாதிப்பாகுபாடு காட்டுபவர்களுக்கு சிறைத்தண்டனை விதிப்பதற்குச் சட்டத்தைமாற்றவேண்டும்''

யாழ். நகர மண்டபத்தில் நேற்று நடந்த சர்வகட்சி மகாநாட்டில் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை பேசுகையில் மேற்கண்டவாறு சொன்ஞர் அவர் மேலும் பேசுகையில் சொன்னதாவது:

இந்தியச் சட்டத்தில் சாதியை ஒழிக்க வழி இருக்கிறது. இது இங்கும் வரவேண்டும். காந்தி மகான் தான் கலப்புத்திருமணத்துக்கு வித்திட்டவர். அவர் சாதிஒழிய வேண்டுமென விரும்பினர்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில் 'சாதிப்பிரச்னையைத் தீர்க்காவிட்டால், மற்றப் பிரச்னை தீராது. சிறுபான்மைத் தமிழர் மட்டும் இதற்காகப் பாடுபட்டால் தீண்டாமை நிலவுமேதவிர ஒழியாது பெரும்பான்மைத்தமிழரும் இதற்குப் பாடுபடவேண்டும். பௌத்த பாடசாலை எதிர்ப்பும், தீண்டாமைஒழிப்பும் ஒன்ருேடு ஒன்று பின்னப்பட்டிருப்பதால், நாம் இரண்டுக்கும் சேர்த்துத்தான் பாடுபடவேண்டும்'' என்ருர்.

திரு. என். ரி. செல்லத்துரை பேசுகையில், மலைநாட்டுத் தமிழர் சார்பில் திரு. தொண்டமான் நியமன எம். பி.வாக நியமிக்கப்பட்டதுபோல், 5 லட்சம் சிறுபான்மைத் தமிழருக்கும் ஆட்சிமன்றததில் நியமன எம். பி. ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமென்ருர்.


NOTICE

**M s Trade & Transport Co Ltd.** Will be closed for business from **1st June 1969** until further notice due to repairs and renovations being carried out. The Management regrets any inconvenience caused to customers in consequence.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஒலிபெருக்கிக்குரிய நல்ல நிலைமையிலுள்ள 'பிலிப்ஸ்' மெயின் ரேப்றெக்கோடர் விற்பனைக்குண்டு.. விக்ரேஸ், 23, டணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 1167

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 1—6—69

செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6 35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை 6-45 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 படப்பாட்டு, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 ஆங்கில வகுப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 வளரும்பயிர், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 இசைப் பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7 03 கர்நாடகஇசை, 7-35 பேச்சு, 7-45 வாத்திய இசை, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9 -30 செய்திச்சுருள், 9-45 நாதஸ்வரம், 10-30 செய்திச்சுருக்கம்.

## சமய அறிவுப் போட்டி

சுழிபுரம், சனி

வழக்கம்பரை சன சமூக நிலைய பஜனைச் சபையினரால் சமய அறிவுப்போட்டி நடாத்தப்படவிருக்கின்றது. வருடாவருடம் நடாத்தப் படவிருக்கும் இப்போட்டிக்கு இவ்வாண்டு திரு. வெங்கடாசலபதி பொறுப்பதிகாரியாக கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார். போட்டியில் வெற்றிபெறுபவர்களுக்குப் பரிசில்கள்

அளவெட்டி மஹாஜனசபை
கிராம முன்னேற்றச் சங்கம்

### சீட்டிழுப்பு

அளவெட்டி கிராம முன்னேற்றச் சங்க வளர்ச்சி நிதிக்காக நடாத்தப்படும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 1-6-69 கும்பளாவளை விநாயகராலயத்தில் நடைபெறும். முடிவுகள் 5-6-69 ல் 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும்.

செ. இராசகுலேந்திரன்,
1589 செயலாளர்.

வர்த்தக ஸ்தாபன

## உதை பந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக வர்த்தக ஸ்தாபனங்களிடையே ஒரு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நடைபெறவிருக்கின்றது.

காரைநகர் 'மாலுமீன்' விளையாட்டுக் கழக காரியதரிசி திரு ராஜேந்திரா "யாழ். வர்த்தகர் உதைபந்தாட்டச் சங்கத்தை" ஆரம்பிப்பதற்கு பெரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இச் சுற்றுப் போட்டியினல், பல உதைபந்தாட்ட வீரர்களுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள பெரிய வர்த்தக ஸ்தாபனங்களில் வேலை வாய்ப்புக் கூடக் கிடைத்துள்ளதாம்.

இச் சுற்றுப் போட்டி இம் மாத இறுதியில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாக விருக்கின்றது. (தே. நி)

## பஸ்சுக்குள் பாம்பு

மீதோட்டமுல்லை, சனி

ஓடிக்கொண்டிருந்த இலங்கைப் போக்குவரததுச்சபையின் பஸ்ஒன்றில் ஒரு நாக பாம்பு பிரயாணிகளைக் கலங்க வைத்த சம்பவம் கிருன்ட்பாஸ்-திபிர்க்கஸ் சந்திக்கு அருகாமையில் நேற்று முன் தினம் நடைபெற்றது. பஸ்சுக்குள் பாம்பொன்று ஊர்ந்ததைக் கண்ட பிரயாணிகள் அலறி அடித்துக் கொண்டு ஓடும் பஸ்சில் இருந்தே குதித்தனர். இதனல் பல பெண்களுக்கும் ஆண்களுக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டதாம்.

குடிபோதையில் தமது பாம்புடன் பிரயாணம் செய்த பாம்பாட்டி ஒருவர் தமது மூடையை அவிழ்த்து பாம்புடன் விளையாட முயற்சி

## தென்மராட்சிக்கு ஒரு விளையாட்டு மைதானம்

### விளையாட்டு டைரக்டர் உறுதி

மட்டுவில், சனி

"தென்மராட்சிப் பொது மக்களுக்கு ஒரு விளையாட்டு மைதானம் தேவைஎன்பதை நான் உணருகிறேன். தென்மராட்சிவிளையாட்டுக்கழகத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க ஒரு பொது விளையாட்டு மைதானம் அமைக்க ஆவன செய்வேன். பொதுவாக மக்களின் வாழ்க்கைக்கு வேண்டிய முக்கிய அம்சங்களில், விளையாட்டுப் பயிற்சியும் ஒன்ருகும். இதற்கான தொண்டுகளைச் செய்வதும் ஒரு பொதுநலசேவை என்று கணிக்கப்பட வேண்டியது அவசியம்" என இலங்கை விளையாட்டுத்துறை டைரக்டர் டாக்டர் எச். எஸ். ஆர். குணவர்த்தன தமது சாவகச்சேரி விஜயத்தின்போது, தென்மராட்சி விளையாட்டுக் கழகத்தினரால் அளிக்கப்பட்ட பகல் போசன விருந்தின்போது கூறினர்.

சாவகச்சேரிக்கு விஜயம் செய்த டாக்டர் குணவர்த்தனவை தென்மராட்சி விளையாட்டுக் கழகத்தலைவர் திரு. பி. எஸ் ஜெயவீரசிங்கம், செயலாளர், திரு. வி. ரி. நடராஜா, பொருளாளர் திரு. ஸ்ரீகந்தராஜா, சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. சு. கனகரத்தினம், ஆகியோர் வரவேற்று, உபசரித்தனர். அப்பொழுது தென்மராட்சி விளையாட்டுக் கழகத்தலைவர் திரு. ஜெயவீரசிங்கம், சாவகச்சேரி பொதுமக்கள் ஒரு விளையாட்டு மைதானம் இல்லாமையால் படும் கஷ்டங்களை எடுத்து விளக்கி அதற்கான நிலங்கள் வசதியாய் இருப்பதாகவும், அதை எடுத்து ஒரு விளையாட்டு மைதானம் அமைத்துத் தரும்படியும் வேண்டிக் கொண்டார். இது சம்பந்தமாக குறிப்பிட்ட நிலத்தையும், திரு. குணவர்த்தன நேரில் சென்று பார்வையிட்டார் இதுபற்றி டாக்டர் குணவர்த்தன அபிப்பிராயம் தெரிவிக்கையில் கூறியதாவது.

தாம் நிலத்தை எடுத்துக் கொடுத்த போதிலும், அதன் அத்தியாவசிய திருத்த வேலைகளை மக்கள்தான் கவனிக்கவேண்டும் என திரு. குணவர்த்தன தெரிவித்தார்.

நகரசபைத் தலைவர் திரு க. கனகரத்தினம் தான் மேற்படி விளையாட்டுமைதானத்தை சிரமதானமூலம் திருத்திக் கொடுப்பதாக பொறுப் பேற்றுக் கொண்டார்.

## மாணவர் சுற்றுலா

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் வண்ணை மேற்கு முஸ்லிம் வித்தியாலய ஆசிரியர்களும் மாணவர்களும் மூன்று பஸ்களில் தங்கள் சுற்றுப்பிரயாணத்தை சென்ற 26-ந் திகதி ஆரம்பித்தனர்.

ஆரம்பத்தில் கைதடியிலுள்ள குருடர் செவிடர் பாடசாலைக்குச் சென்று அங்குள்ள மாணவர்களின் வேலைத்திட்டங்களையும் கைப்பணிப் பொருட்களையும் பார்வையிட்டுக் கொண்டு ஆனையிறவு உப்பு மாலை நோக்கிச் சென்று உப்புச்செய்கையின் முறைகளையும் அவற்றின் வகைகளையும் நல்ல விளக்க உரைகளுடன் அறிந்தனர்.

பரந்தனிலுள்ள இரசாயனசாலையை அடைந்து அங்கு இரும்பைப் பொருத்தும் வகை, அறுக்கும் முறை, மரம் அரியும் இயந்திர வகை ஆகிய நுட்பமான இயந்திர பாவனைகளை அறிந்து பின்னர் இரசாயன முறையினல் உப்பு மாற்றமடையும் தன்மைகளையும் வாயுவகைகளையும் கண்டு அறிந்தனர்.

இரணமடுக்குளம், கிளிநொச்சி விவசாயப்பண்ணை, தென்னைச்செய்கை, முதலான இடங்களைப் பார்வையிட்டு வரும் வழியில் மிருசுவில் குடியேற்றத் திட்டத்தினையும் அங்கு பெண்கள் விவசாய வேலையில் ஈடுபட்டிருக்கும் தன்மைகளையும் அறிந்தனர். இரவு வித்தியாலயத்தை வந்தடைந்தனர். (மு.நி.)

## இடமாற்றங்கள்

சுழிபுரம், சனி

வலிகாமம் மேற்கு விவசாய விஸ்தரிப்புக் கந்தோர் மேற்பார்வை பொறுப்பு உத்தியோகஸ்தராகக் கடமையாற்றிய திரு. எஸ். குமரவேலு அடுத்த மாதம் தொடக்கம் வவுனியாப் பகுதியிலுள்ள முத்தையன்

# வள்ளுவர் விழா போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, வெள்ளி

கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரால் திருவள்ளுவரின் 2000-ம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட கலைப் போட்டி முடிவுகள் வருமாறு:-

பேச்சுப் போட்டி (கீழ்ப் பிரிவு வ. மகாதேவன் (கரணவாய் தெற்கு மணியகாரன் தோட்டம் சைவப் பாடசாலை), பொ. கனகேஸ்வரி (கரணவாய் மகா வித்தியாலயம்), த, விஜயகுமார் (உடுப்பிட்டி அ. மி. கல்லூரி).

மத்திய பிரிவு) ந. சிவசோதி (மணியகாரன் தோட்டம் சைவப்பாடசாலை), சு. செல்வநாயகி, தி. சகுந்தலாதேவி (கரணவாய் வடக்கு தாமோதர வித்தியாலை மாணவிகள்).

(மேற் பிரிவு) த. வசந்தகுமார் (உடுப்பிட்டி அ. மி. கல்லூரி), கு. தங்கராஜா (கரணவாய் மகா வித்தியாலயம்) சு. கமலாதேவி (கரணவாய் ம. வி)

தேவார மனன இசைப் போட்டி (கீழ்ப்பிரிவு) சு. மோகாம்பாள் (கரணவாய் வடக்கு தாமோதர வித்தியசாலை) செ. புவனேந்திரராசா (தாமோதர வித்தியாலயம்) (மத்திய பிரிவு) ந. சிவசோதி (மணியகாரன் தோட்டம் சைவப் பாடசாலை), செ. செல்வராணி (மணியகாரன் தோட்டம் சைவம். பா), இ. சோமசுந்தரம் (தாமோதர வித்தியாலயம்) (மேற்பிரிவு) நா. தனபாலசிங்கம் (கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்).

கரணவாய் தெற்கு சோளங்கன் மகா வித்தியாலய மண்டபத்தில் இப் போட்டிகள் நடாத்தப் பட்டன.

## கோப்பாய் செய்திகள்

— நமது நிருபர் ஆர். பி. ஹரன் —

### முன்னுள் தலைவர்கள் உருவப்படம்

கோப்பாய் கிராமசபையின் முன்னுள் தலைவர்களது உருவப்படங்கள் கிராம சபை அலுவலகத்தில் திறந்து வைக்கப்படவுள்ளன. இந்நிகழ்ச்சி வெகுவிரைவில் நடைபெறுமெனவும், இதற்கான நடவடிக்கைகளை மேற்படி கி. ச. தலைவர் திரு. பரமானந்தராசா மேற்கொண்டுள்ளாரெனவும் தெரியவருகிறது

### பிரயாணிகள் கஷ்டம்

கோப்பாய் - யாழ்ப்பாண இடைத்தூர சேவைக்கு போதிய பஸ்கள் விடப்படாமையால் இப்பகுதி பஸ் பிரயாணிகள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர்.

### வள்ளுவர் விழா

இருபாலை மத்தியசனசமூக நிலையத்தினர் வள்ளுவர் விழாவைசிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

7-ம் திகதி நடைபெறவிருக்கும் இவ்விழாவையொட்டி கட்டுரைப் போட்டி பேச்சுப் போட்டி, சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் முதலியன

### இரட்டைத்தட்டு பஸ் குடை சாய்ந்தது

மீதோட்டமுல்லை, ஞாயிறு

கடுவலை என்னும் இடத்திலிருந்து மகரகமை நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்து சபையின் இரட்டைத்தட்டு பஸ் ஒன்று பாதை சறுக்கி பிரயாணிகளுடன் பள்ளத்தில் குடைசாய்ந்த சம்பவம் மீதோட்டமுல்லை என்னும் இடத்தில் நடைபெற்றது.

மேல்தட்டிலும் கீழ்த்தட்டிலும் ஏராளமான பிரயாணிகள் இருந்தபோதிலும் உயிர்ச்சேதம் ஒன்றும் ஏற்படவில்லை. காயம்அடைந்த பல பிரயாணிகள் உடனடியாக கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

ஒடுக்கமான பாதையில் வாகனங்கள் ஒன்றை ஒன்று வழிவிட்டுக் கொடுக்கும் போதே இந்தச் சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. (வி. நி.)

### 2 பெண்களுக்கு வெகுமதி

மஹாரகம, சனி

இருபெரிய குற்றவாளிக

## திருமலைச் செய்திகள்

— நமது நிருபர் து. பாலேந்திரா —

திருக்கோணமலை டொக்யாட் விளையாட்டுத் திடலில் கொழும்பு 'ரட்ணம்ஸ்' க்கும்திருமலை 'சீ ஹோக்ஸ்' க்கும்இடையே நடைபெற்ற இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தின்ஆதரவின் கீழான 1-வது பிரிவு உதைபந்தாட்டப்போட்டியில் 1-1 என்ற சமநிலை முடிவில் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

### கட்டுரைப் , போட்டி

இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் மாணவ சமுதாயத்திடையே ஒரு கட்டுரைப் போட்டியை ஒழுங்கு செய்யவிருக்கின்றது. பரிசு பெறும் மாணவர்களுக்கு 250 ரூபாய் பரிசாக வழங்கப்படும். வெற்றிபெற்ற பாடசாலைகளுக்குப் பரிசுக் கேடயமும் வழங்கப்படும்.

### மாவோ ஜுரம்

கிளிவெட்டிப் பகுதியில் மாவோ ஜுரம் வேகமாகப் பரவிவருகின்றது.

### கிராமிய வைத்தியசாலை

அலி ஒலுவ சந்தியில் கிராமிய வைத்தியசாலை ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கும்படி திருக்கோணமலை மாவட்ட இணைப்புக்குழுவைசேனுவிலை கிராமசபைத் தலைவர் திரு. பி. எச். சந்திரசேன கோரியுள்ளார்.

### பிரேமதாசா விஜயம்

எதிர்வரும் ஜூன் மாதம் 13-ம் திகதியளவில் திருக்கோணமலைமாவட்டத்துக்கு உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாசா விஜயம் செய்யவிருக்கிருர். அப்போது அவரை கிளிவெட்டிக்கும் வரவழைப்பதற்கான ஏற்பாடுகளை கிளிவெட்டி ஐ. தே. க. கிளை மேற்கொண்டுள்ளது.

### புதுக்கட்டடங்கள்:

திருக்கோணமலை ஆஸ்பத்திரியில் 100 கட்டில்கள் போடக்கூடிய இரு புதிய கட்டடங்களை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது இதற்குரிய வேலைகள் விரைவில் ஆரம்பமாகும்.

### எங்கே?

மூதூர் கூ. மொ வி. ஸ்தாபனத்தின்முன் போடப்பட்டிருந்த பெயர்ப்பலகை தற்போது அங்கு காணப்படவில்லை. இரண்டு வருடங்களாக மறைந்திருந்த இந்தப் பெயர்ப்பலகை இதுவரையும் முன்புறத்துக்கு வராமலிருப்பதினல் குடியேற்றப்பகுதி உட்பட வெளியிடங்களிலிருந்து வரும் மக்கள் கூ.மொ.வி. ஸ்தாபனம் இருக்குமிடம் கேட்டுப் பிறரின் உதவியை நாடவேண்டியுள்ளது.

### ஐ. தே. கிளை அங்குரார்ப்பணம்

'பதவிக்கு ஆசைப்பட்டவரல்ல நமது பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா. நாட்டைப்பல வழிகளிலும் முன்னேற்றம் அடையச் செய்வேண்டுமென்ற ஒரே கொள்கைக்காகவும் பெரும்பாலான மக்களின் விருப்பத்துக்காகவும் மட்டுமே அவர் பிரதம மந்திரிப் பதவியை வகித்துக்கொண்டிருக்கிருர்'

இவ்வாறு முள்ளிப்பொத்தானையில் ஜனுப் கமால்தீன் பூங்காவில் ஐ. தே. கட்சியின் கிளையை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசிய மூதூர் எம். பி. ஜனுப் எம் ஈ. எச். முகம்மது அலி குறிப்பிட்டார்.

### திருக்குறள் மனனப்போட்டி

காரியாதிகாரி பிரிவு ரீதியாக திருமலை மாவட்ட மாணவரிடையே திருக்குறள் மனனப்போட்டி ஒன்று நடாத்தப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# 'பிற்போக்குக் கும்பலாக தமிழினம் வாழ்கிறது'

### ஔவை துரைசாமி கூறுகிருர்

திருக்கோணமலை, ஞாயிறு

'ஏழேழாண்டு என்னும் சொல் மருவித்தான் 'ஈழம்' போன்ருேர் அறுதியிட்டுக் கூறியுள்ளனர். கரப்பா, முகஞ்சதாரோ நாகதாரோ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

படவிருக்கும் இப்போட்டிக்கு இவ்வாண்டு திரு. வெங்கடாசலபதி பொறுப்பதிகாரியாக கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார். போட்டியில் வெற்றிபெறுபவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.


ராஜா (யாழ்ப்பாணம்) 139வது தினம்
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்கு அரைக்கட்டணம்


பட்டதாம்.

குடிபோதையில் தமது பாம்புடன் பிரயாணம் செய்த பாம்பாட்டி ஒருவர் தமது மூடையை அவிழ்த்து பாம்புடன் விளையாட முயற்சி செய்த காரணத்தாலேயே இந்த நிகழ்ச்சி நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. இதைத்தொடர்ந்து அந்தப் பஸ்பாம்பாட்டியையும்பாம்பையும் இடைவளியில் இறக்கி விட்டு பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு மீண்டும் பிரயாணத்தைத் தொடர்ந்ததாம்.

வேலைகளை மக்கள்தான் கவனிக்கவேண்டும் என திரு. குணவர்த்தன தெரிவித்தார்.

## சுன்னுகம் ஆலய உற்சவம்

சுன்னுகம், சனி

சுன்னுகம் மயிலணிக் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 11-ந் திகதி நடைபெறும். முறையே தேர், தீர்த்த உற்சவங்கள் 21-ம், 22-ம் திகதிகளில் நடைபெறும்.


வல்வெட்டித்துறை
ரஞ்சனு தியேட்டர்
ஜெய்சங்கர் - விஜயா
நடித்த
பெண்ணே நீ வாழ்க

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன் — விஜயா
நடித்த
இதயக்கமலம்

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ராஜேந்திரன் - விஜயகுமாரி
நடித்த
சாரதா
(புதிய கொப்பி)

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 10-30மணி
எம். ஜி. ஆர். - சாவித்திரி
நடித்த
பரிசு

REGAL JAFFNA
Daily 4 Shows
June Guiliano
Evelyn Stewart
in
ADIOS GRINGO
(Adults only)

MANOHARA
JAFFNA
Daily 6-30, & 9-30 P.M.
Gamini fonseka &
Vijitha Mallika
in
DEHA - DAKA - DUKA
தெஹ - தக - துக
(Singalese)



ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த
உயிரா மானமா

4-வது வெற்றி வாரமாக
காட்சியளிக்கின்றது
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
ரவிச்சந்திரன் - காஞ்சனு - நாகேஷ்
அசோகன் - கீதாஞ்சலி
நடித்த
அதே கண்கள்

இங்ஸ்லி (கொழும்பு) மைலன் (ஜிந்துப்பிட்டி)
ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) விஜயா (மட்டுநகர்)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
காண்பிக்கப்படவிருக்கின்றது
(ஜேம்ஸ்பொன்ட்) (ஆடலழகி)
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
நாகேஷ் - மனோரமா - சோ
குமாரி சச்சு, சுந்தரராஜன்
நடித்து
வி. ஸ்ரீநிவாசனின் டைரக்ஷனில்
உருவாகி வெளிவந்துள்ள
மகோன்னத சித்திரம்
பொம்மலாட்டம்
திரைக்கதை வசனம் சோ. இசையமைப்பு வி. குமார்


சாய விஸ்தரிப்புக் கந்தோர் மேற்பார்வை பொறுப்பு உத்தியோகஸ்தராகக் கடமையாற்றிய திரு. எஸ். குமரவேலு அடுத்த மாதம் தொடக்கம் வவனியாப் பகுதியிலுள்ள முத்தையன் கட்டுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

சுழிபுரம், சனி

வட்டுக்கோட்டை - கொட்டைக்காட்டுப் பகுதியில் கிராமசேவையாளராகக் கடமையாற்றிய திரு. எஸ். சிவபாதம் பண்டத்தரிப்பு கிராமசேவையாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

அராலி, சனி

வலி. மேற்கு கிருஷிகப் போதனுசிரியர் திரு குமாரவேல் அடுத்த மாதம் முதலாந் திதி தொடக்கம் முத்தையன்கட்டு குடியேற்றப்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

காங்கேசன்துறை, சனி

காங்கேசன்துறைப் பட்டின சபை மின்சார சுப்பிரிண்டன்ட் திரு. நடராசா இம் மாதத்திலிருந்து பருத்தித்துறை நகரசபைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். இவரது இடத்திற்கு ஹொரணையிலிருந்து திரு. நவரத்தினராசா அடுத்த மாதம் இங்கு வரவிருக்கிருர்.

யாழ்ப்பாணம், ஞாயிறு

சுன்னுகம் மயிலணி சைவ வித்தியா சாலையில் முப்பது வருடங்களுக்குமேல் ஆசிரியராகவும் உதவி தலைமை ஆசிரியராகவும் கடமையாற்றிய திரு. க. இளையதம்பி இம்மாதம் தொடக்கம்ஓய்வு பெறுகிருர்.

டாட ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

7-ம் திகதி நடைபெறவிருக்கும் இவ்விழாவையொட்டி கட்டுரைப் போட்டி பேச்சுப் போட்டி, சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் முதலியன நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

### ஞானசம்பந்தர் விழா

கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தாரால், ஞானசம்பந்தர் விழா சிறப்பாக கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இவ்விழாவில் ஞானசம்பந்தரின் ஞானப்பால் உற்சவமும், திருமுறை இசையும், சமயப் பெரியார்களின் சொற்பொழிவுகளும் இடம் பெறவுள்ளன.

### மின்சாரம் கிடைக்கும்

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு விரைவில் மின்சார விநியோகம் கிடைக்கவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை மேற்படி பாடசாலைப் பெற்ருேர் ஆசிரியர் சங்கமும், பழைய மாணவர் சங்கமும் மேற்கொண்டுள்ளன.

### ஆட்சேபம்

கோப்பாய் கிராமசபையின் வாளி மலகூட அமைப்பு முறையை நீக்கி சலதாரை மல கூடத்தை அமைக்க வேண்டுமென்று விடுத்த கோரிக்கையை இக்கிராம சபை வாக்காளர் பலர்ஆட்சேபித்துள்ளதாகத் தெரிய வருகிறது.


"ராதா"
பத்மினி ஜவ்வாது பத்தி
நல்ல சுகந்த மணமுள்ள பத்மினி ஜவ்வாது பத்தியை பாவித்து மகிழுங்கள். இதிலுள்ள வாசனை நீங்கள் விரும்பக்கூடிய நறுமணம் உள்ளது உங்கள் இல்லங்களில் நறுமணம்கமழ பாவித்து இன்புறுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
ராதா பெர்பியூமரி அன் ராதா புறடக்ஸ்
ஏகவிநியோகஸ்தர்கள்:
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனுதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.)
53, கே. கே. எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068


## 2 பெண்களுக்கு வெகுமதி

மஹாரகம, சனி

இருபெரிய குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்குஉதவிய இரு பெண்களுக்குமேல் மாகாணபொலிஸ் சுப்பிரின்டன் திரு. எஸ் வாமதேவா வெகுமதி வழங்கியுள்ளார். இவ்வெகுமதியைப்பணமாக மஹாரகமவிலுள்ள மாகமேகா தோட்டத்தில்பொதுக்கூட்டம் ஒன்று கூட்டி அதில் அப்பெண்களுக்கு வழங்கதிரு. வாமதேவா உத்தேசித்துள்ளார்.

இந்தஇருகுற்றவாளிகளும் கைது செய்யப்படுவதற்கு முதல்நாள் இரவு கோட்டையிலுள்ள வீடொன்றினுள் புகுந்து திருடிவிட்டு மஹாரகம சந்தையில் நித்திரை செய்துகொண்டிருக்கும் பொழுது திருமதி ஹெற்றி ஆராய்ச்சிகே, ஜெ நோனு, திருமதி ஹெவமானகேலீலாவதி ஆகிய இருவரும் கண்டு பொலிசுக்கு அறிவித்தார்கள்.

## வேலையில்லா திண்டாட்டத்திஞல் செய்தவேலை

திருக்கோணமலை, சனி

திருக்கோணமலை போலீஸ் விடுதிச்சாலையிலிருந்து சைக்கிள் ஒன்றைத் திருடிய குற்றத்திக்காக 20-வயது விஜயநாதன்- பாலேந்திரா என்னும் இளைஞன் சட்டவிரோதமாக வீடுடைத்துத் திருட்டுக்குற்றம் புரிந்ததா திருக்கோணமலை மாவட்ட மாஜிதிஸ்ரேட் நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட் திரு. டி. சி. டபிள்யு விக்கிரமசேகரா முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் தான் சைற்கிள் திருடிய குற்றத்தை ஒப்புக்கொண்டகன். இருந்ல போதிலும் சட்ட விரோதவக வீடு உடைத்ததெனற தனது குற்றச்சாட்டை அவன் மறுத்தான். தான்களவாடிய குற்றத்ருற்குக் காரணம் தனது துவலையில்லாத் திண்டாட்டமே எ மாஜிஸ்திரேட்டைப்பார்த்து அவர் கூறியபோது "இது உமக்கு ஒரி நல்ல தொழில் என்று நினைக்கின்றீரா?" என்று மார்ஜிஸ்திரேட் கேட்டார்.

இதற்கு அவர் பதிலளிக்கவில்லை.

இவ்வழக்கை தொடர்ந்தே இன்ஸ்பெக்டர் ஜயசூரியா பிரஸ்தாப இளைஞன் ஓர் ஓய்வு பெற்ற ஒரு போலீஸ் உத்தியோகஸ்தரின் மகன் எனக் குறிம்பிட்டார். ஆள் அடையாளம் காண்பதற்கும் தீர்ப்பதற்குமான வழக்கை அடுத்த மாதம் வரை மாஜிஸ்ருரேட் ஒத்திவைத்தார்.

## ஔவை துரைசாமி கூறுகிருர்

திருக்கோணமலை, ஞாயிறு

'ஏழேழாண்டு என்னும் சொல் மருவித்தான் 'ஈழம்' என்ருயிற்று. எனவே ஈழம் தான் தமிழரின் தாய் நாடாக இருத்தல் வேண்டும் அத்தகு தொன்மை சேர்ந்த நாட்டில் நீங்கள் வாழ்கின்றீர்கள்.''

இவ்வாறு திருக்கோணமலை ஸ்ரீ முத்துக்குமாரசாமி கோயிலில் அருள்நெறி இளைஞர் மன்றத்தின் ஆதரவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

அறிவியல் துறையில்எதையும் ஆராயும் உணர்வுடன் வாழ்ந்தவன் தமிழன். தெளிந்த புத்தியுள்ளவனுக இருந்தவன் தமிழன். கடல் குடித்த குறு முனியாம் அகத்தியரைத் தமிழகத்துக்கு இறைவன் அனுப்பிய பொழுது இங்குள்ளோரின் வினுக்களுக்கு அஞ்சி வர மறுத்தாராம் அந்த முனிவர். அவ்வாறு ஆராய்ந்தறியும் தன்மை கொண்ட தமிழன் அன்று வாழ்ந்தான். இன்ருே கண்மூடித்தனமாக எதனையும் ஏற்கும் பிற்போக்குக் கும்பலாகத் தமிழினம் வாழ்கின்றது.

சிவபெருமானே எமது முழுமுதற் கடவுளாவர். வேதங்களில் ஓரிடத்தேனும் சிவம் என்னும் சொல் லில்லை. என்பதை மேல்நாட்டு அறிஞர்களே இன்று ஆராய்ச்சி செய்து முடிவு செய்துள்ளனர். இதை மார்க்ஸ், முல்லர், மத்யூஸ், போன்ருேர் அறுதியிட்டுக் கூறியுள்ளனர். கரப்பர், முகஞ்சதாரோ நாகதாரோ நாகரீகத்தில் சிவவழிபாடு காணப்படுகின்றது.

எனினும் இன்று தமிழினத்திடையே புதுவிழிப் புணர்ச்சி, மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. இன்று ஏற்பட்டுள்ள புத்துணர்வு நூறு ஆண்டுகட்கு முன்னர் ஏற்பட்டிருப்பின் எம் வாழ்வு மிகவும் சீருற்றிருக்கும்.''

## சாலை

அளவெட்டி, சனி

யாழ் மாவட்ட கூட்டுறவு சங்க சமாஜ தொழிலாளர்கள் சென்ற புதன்கிழமை 1050 தொன் மாவை இறக்குமதி செய்து ஒரு சாதனையை நிலைநாட்டினர்.

பிரான்சிலிருந்து எம். சி. அகதிலாஞ என்ற கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு மா ஏற்றிக் கொண்டு வந்துள்ளது.

## பொங்கல்

மட்டுவில், சனி

வன்னி விளாங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவம் இன்றுகாலை 8மணிக்கு ஆரம்பமாக இருக்கிறது.

மேற்படி மாரி அம்பாளின் வருடாந்தப் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு, கோவில் அன்னதான சபையாரிஞல் அன்னதான வைபவமும் நடைபெறும்.


அன்றும்! இன்றும்!! என்றும்!!!
மக்களின் அபிமானத்திற்கு
பாத்திரமான
CSK
சி. எஸ். கே.
கந்தையா செட்டியார் ஸ்தாபனம்
தரத்தில் உயர்ந்த
சி. எஸ். கே.
தேங்காயெண்ணை, புண்ணக்கு
இந்திரை அரிசி
உற்பத்தியாளர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். இந்திய தகராறு தீர்வது இரு நாடுகளுக்குமே நன்மையளிக்கும்

## சோவியத் பிரதமர் வலியுறுத்தல்

**ராவல்பிண்டி, மே 31**

**இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கு மிடையிலான தகராறுகள் தீர்க்கப்படவேண்டியது இந்த உபகண்டத்தில் அமைதி நிலவுவதற்கு மிகவும் அவசியமாகும் என்று சோவியத் பிரதமர் திரு. கொஸிஜின் கூறியிருக்கிறார்.**

திரு. கொஸிஜின் ஆப்கானிஸ்தானில் சுற்றுப்பிரயாணம் சய்தபின்னர் பாகிஸ்தான் வந்து அதிபர் யாஹ்யாகானுடன் ஆலோசனைகள் நடத்தினார்.

திரு. கொஸிஜினைக் கௌரவிப்பதற்காக நடத்தப்பட்ட விருந்துபசாரமொன்றில் ஜெனரல் யாஹ்யாக்கான் பேசுகையில், இந்தியாக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான தகராறுகளைத் தீர்த்துக்கொள்ள பாகிஸ்தான் தொடர்ந்து முயற்சிகள் எடுத்துவருகிறதென்றும் ஆனால் அதற்கு எதிர்தரப்பிலிருந்து உற்சாகமளிக்கும் விதத்தில் பதிலில்லையென்றும் குறிப்பிட்டார். இந்தியாவின்போக்குப்பற்றி அவர் குறை கூறினார்.

திரு. கொஸிஜின் விருந்துக்குப் பதிலளிக்கையில், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையில் வேறு உறவுநிலவ வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தினார்.

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையில் சுமுகமான நேச உறவு வளருவதை சோவியத்யூனியன் விரும்புகிறதென்றும் இந்த நாடுகளுக்கிடையிலான தகராறுகள் தாஷ்கண்ட் ஒப்பந்தத்தின் கீழ் தீர்த்துக் கொள்ளப்படுவதையே தமது நாடு விரும்புகிறது என்றும் திரு. கொஸிஜின் குறிப்பிட்டார். இரு நாடுகளுக்குமிடையிலான தகராறுகள் சுமுகமாக விரைவில் தீர்த்துக்கொள்ளப்படுமானல் இந்தப் பிராந்திய மக்களின் நலனுக்கே நல்லது என்றார் திரு. கொஸிஜின்

பாகிஸ்தான் அதிபர் யாஹ்யாகானை சோவியத் யூனியனுக்கு வரும்படி திரு. கொஸிஜின் விடுத்த அழைப்பை அவர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்.

## அமெரிக்க மாணவன் தீ மூட்டி தற்கொலை

### நைஜீரியா போரை ஆட்சேபித்து

நியூயோர்க், மே 30

இருபது வயதுடைய அமெரிக்க மாணவர் ஒருவர் நேற்று தம்மைத் தாமேதீமூட்டி தற்கொலை செய்து கொண்டார்.

நைஜீரியாவில் நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போருக்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாகவே இவர்இவ் விதம் செய்தார்.

நேற்று ஐ. நா. பூந்தோட்டத்தில் தம்மைத்தாமே தீமூட்டிக் கொண்ட இவர் அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இன்று அவர் மரணமாகிவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

இவர் தற்கொலை செய்து கொண்ட இடத்தில் 'பயாபரா மக்களைக் காப்பாற்றுங்கள்' என்ற வாசகமடங்கிய சுலோகம் பொறித்த அட்டை காணப்பட்டது.

இவரது முடிவு சம்பந்தமாக தாம் பெரும் அதிர்ச்சியும் கவலையையும் கொண்டதாக ஐ. நா. தலைமைக் காரியதரிசியுதாண்ட் தெரிவித்துள்ளார்.

## 'நேட்டோ' கருத்துக்கு

## ஆர்ஜன்டீனு வேலை நிறுத்தம்

### ராணுவம் சுட்டு ஏழுபேர் பலி

பியூனேஸ்எயார்ஸ், மே 31

ஆர்ஜன்டீனுவில் தொழிலாளர்களும் மாணவர்களும் ஆரம்பித்த வேலைநிறுத்தம் பெரும் வன்செயல்களுடன் முடிவடைந்துள்ளது.

இராணுவ ஆட்சிக்குட்பட்டிருக்கும் இந்தநாட்டில்லட்சக் கணக்கான தொழிலாளர்களும் மாணவர்களும் அதிக உரிமைகளும் வேதனமும்கோரி போராட்டம் ஆரம்பித்திருக்கிறார்கள்:

வேலைநிறுத்தக்காரர்கள் மீது இராணுவத்தினர் சுட்டதில் இதுவரை ஏழுபேர் மரணமடைந்திருக்கிறார்கள்.

## "குறளின் சிறப்பு"

சுழிபுரம், சனி

"உலகில் வாழும் சகல மக்களுக்கும் ஓர் வாழ்க்கை நூலாகக் திகழ்வது திருக்குறளாகும். திருக்குறளில் வாழ்வுக்கு வேண்டிய எல்லாக் கருத்துக்களையும் அவரவற்கு வேண்டியவாறு பெற்றுக் கொள்ளலாம், திருக்குறள் தமிழ் மொழியில் எழுதப்பட்டாலும் இன்று பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு பலோராலும் போற்றப்படுவது ஒன்றே அதன் சிறப்புக்கு போதுமாகும்."

இவ்வாறு வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெற்ற வள்ளுவர்தின விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கிய திரு. சு. சுந்தரம் பிள்ளை. குறிப்பிட்டார். விழாவுக்கு க. வாமதேவன் தலைமைவகித்தார். திரு. சி. வெங்கடாசலாபதி நன்றியுரை கூறினார்.

## கோரிக்கை

சுழிபுரம், சனி

காரைநகர் முகாமிலுள்ள கடற்படையினருக்கும் அப்

## புதிய கமிஷனர்

யாழ்ப்பாணம், ஞாயிறு



முகாந்திரம் இ. பொ. இராசையா ஜே. பி. சென்ஜோன் அம்புலன்ஸ் இயக்கத்தின்யாழ்ப்பாண பிரதேசக் கமிஷனராக, லண்டனிலுள்ளதலைமை ஆளுனர் சேர் வில்லியம் பயிர்க்கினல் நியமிக்கப் பட்டுள்ளார்.

கடந்த பதினைந்து ஆண்டுகளாக சென்ஜோன் அம்புலன்ஸ் இயக்கத்தில் பலவகைப் பதவியிலிருந்த முகாந்திரம் 1965 முதல் யாழ். பிரதேச சுப்பிரின்டனகப் பதவிஏற்று முதலுதவி அளித்தல், மனை மருத்துவம் முதலியவற்றைப் பரப்புவதில் மிகுந்த சிரத்தை செலுத்தினர். இதனல் யாழ்ப்பாணம் திருகோணமலை மாவட்டங்களில் ஆயிரக்கணக்கானமாணவர்களும், மாணவிகளும் முதியோரும் நெருக்கடியான நிலைகளில் முதலுதவியளிக்கத்தக்க தகமை பெற்றனர்.

யாழ். பிரதேசத்திலுள்ள பல்வேறு சமூகசேவைத் தாபனங்களுடன் நெருங்கிய தொடர்புள்ள முகாந்திரம் இராசையா தற்பொழுது இலங்கா ஆயுள்வேதவைத்திய கல்லூரியின் செயலாளராகவும், உறுதுணையாளர் சங்க உபதலைவராகவும், ஆஸ்பத்திரி உபகுழு நிறுவனத் தலைவராகவும் யாழ்ப்பாண யுனைட்டட் டெனிஸ்கிளப்பின்தலைவராகவும் கடமையாற்றுகிறார்.

## சமய நூல்கள் இலவச வெளியீடு

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையார் அண்மையில் நடத்திய சைவமகாநாட்டிற்குத் தலைமைவகிக்கத் தமிழ் நாட்டிலிருந்து அழைக்கப்பட்ட பெரியார் சித்தாந்த வித்தகர் கயப்பாக்கம் திரு. மு. சோமகந்தரஞ்செட்டியார் 'விபூதி உருத்திராக்கம்', 'ஸ்ரீ பஞ்சாட்சரம்' என்னும் பொருள்கள்பற்றி எழுதிய நூலை யாழ்ப்பாணம் மில்க்வைற் சோப் தொழிற்சாலை அதிபர் தம் செலவில் அச்சிட்டு நாவலர் சைவப்பிரகாசவித்தியாசாலையில் நடைபெற்றகந்தபுராண விரிவுரைத்தொடர்... உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை

### மாவை ஆலயத்தில் கந்தபுராண படனம்

அளவெட்டி, சனி

மாவைக் கந்தன் ஆலய உற்சவத்திற்கு மூன்று மாதத்திற்கு முன் தொடங்கும் முன்னேடியாக நிகழும் கந்தபுராணபடனம் நேற்று ஆரம்பமானது.

சம்பிரதாய முறைப்படி ஆரம்பிக்கப்பட்ட இப்புராணபடனம் தொடர்ந்து மூன்று மாதம் நடைபெறும். இப்புராணபடனத்தை பிரம்மஸ்ரீ சு. துரைச்சாமிக் குருக்கள் ஆரம்பித்துவைத்தார்.

## 'தமிழே போதன மொழியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மனதில் சிந்தனைகளை தோற்றுவிக்க வேண்டும்

## இலக்கியங்களின் நோக்கம் பற்றி

## திரு. கிரி தெரிவிக்கும் கருத்து

சென்னை, மே 31

'பொழுதுபோக்கு அளிப்பது மட்டும் இலக்கியத்தின் நோக்கமாகஇருக்கக்கூடாது மக்களின் மனதில் மாண்புமிக்க சிந்தனைகளையும் அவை தோற்றுவிக்கவேண்டும்' என்று இந்தியாவின் இடைக்கால ஜனதிபதி திரு. வி. வி. கிரி கூறினார்.

சென்னை ராஜாஜி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் தமிழ் எழுத்தாளர் சங்க மகாநாட்டை ஆரம்பித்து வைத்து திரு. கிரிபேசினர். அவர் மேலும் கூறியதாவது:

இச்சங்கத்தின் ஸ்தாபகரான காலஞ்சென்ற 'கல்கி' கிருஷ்ணமூர்த்தியுடன் தொடர்பு கொண்டிருந்த பெருமை எனக்குண்டு. விடுதலைப் போராட்டகாலத்தில் ஒரே சிறையில் நாங்கள் அடைபட்டு இருந்தோம். இச்சங்கத்தின் தலைமைப் பதவியை கண்ணியத்துடன் சிறப்புடன் வகித்தவரும் மற்ெருரு சிறைத் தோழருமான சிவஞானத்துடனும் நான் நெருங்கிப் பழகியிருக்கிறேன் எனவே எனது முதல் கடமை என் நண்பர் கல்கிக்கு அஞ்சலி செலுத்துவதாகும். பலவழிகளில் அவர் ஓர் முன்னேடியாகத் திகழ்ந்தார்.

பண்டைக் காலத்திலிருந்தே தமிழ்நாடுதன்னுடைய அறிவாளிகளுக்கு முதல் இடம் கொடுத்து வந்துள்ளது. பலப்பல நூற்றுண்டுகளாக வாழையடிவாழையாக வந்து தமிழ் வளத்துக்கு மட்டுமின்றி இந்நாட்டு மக்களின் வாழ்வு மாண்பு பெறுவதற்கு ஊக்கமளித்தும் தனிச்சிறப்பான பங்கு பணியாற்றிய எழுத்தாளர்கள் மூலம் இந்த மரபு மிக நன்ருக பராமரிக்கப்பட்டு வந்திருக்கிறது. உதாரணமாக திருவள்ளுவரின் திருக்குறள் கவிதை நயம் பொருந்தியது மட்டுமின்றி ஓர் அறிவுக் களஞ்சியமுமாகும், தத்துவ விஷயங்களை பற்றி மட்டும் திருவள்ளுவர் பேசவில்லை ஒவ்வொருவரும் நன்மையுடன் பின்பற்றக்கூடிய நெறிகளையும் அவர் அளிக்கிறார். இரண்டாயிரம்ஆண்டுகள் பழமையாயினும் திரு

யும் எளிய நடையில் தந்து, தமிழ் இலக்கியத்தின் பெருமையை மக்கள்உணரச்செய்தது. முதல் மந்திரி கருணநிதியும் ஒரு கவிஞர், எழுத்தாளர், பேச்சாளா என்னும் முறையில் ,தனிச்சிறப்புப்பெற்றவர் தனது எழுத்தாளர்களை புகழ்வதோடு மட்டுமின்றி எழுத்தாளர்கள் தங்களுடைய லட்சியங்களை நடைமுறைக்குக் கொண்டுவரும் வகையில் அவர்களை உயர்பீடத்தில் அமர்த்தி தமிழ்நாடு கௌரவிக்கிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

பொழுதுபோக்கு அளிப்பது மட்டும் இலக்கியத்தின் வேலையல்ல. மக்களின் மனதில் மாண்புமிக சிந்தனைகளை தோற்றுவிப்பதாகவும் அது இருக்கவேண்டும். இன்று எழுத்தாளர்களின்பங்கு மிக முக்கியமானது. தமது எழுத்தின்மூலம் மக்களின் சிந்தனைகளையும் நாட்டின் தலைவிதியையும் எழுத்தாளர் உருவாக்கமுடியும். இலக்கியம் சக்தி வாய்ந்த ஆயுதமாகும். இதை சரியானபடி பயன்படுத்தினல் அறியாமை, தப்பெண்ணம் ஆகிய சக்திகளை நாம் எதிர்த்துப் போரிட்டு தேசிய ஒற்றுமை, மனித குலத்தோழமை ஆகியவற்றை வளர்க்க முடியும். மாபெரும் இலக்கியங்கள் கடந்த காலத்துக்கு குரல் கொடுக்கின்றன. நிகழ் காலத்தை பிரதிபலிக்கின்றன. வருங்காலத்தை உருவாக்குகின்றன.

## சேந்தாங்குள பகுதியை உல்லாச பிரதேசமாக்குக

சுழிபுரம், சனி

கீரிமலைப் பிரதேசத்தில் நடைமுறையில் அனுஷ்டிக்கப்பட்ட காரியங்கள் தடையின்றி தொடர்ந்து நடைபெறுவதற்கு வகை செய்யுமுகமாக இப்பகுதியை உல்லாசப் பிரதேசமாக்காது சேந்தான்குளப் பகுதியை உல்லாசப் பிரயாணத்தை ஊக்குவிக்கும்முறையிலமைந்த ஒரு பிரதேசமாக்குமாறு உள்ளூராட்சி அமைச்சரையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கோரும் தீர்மானம் சுழிபுரம் கிராமசபையினரால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தலைவர் திரு. சு. கந்தசுவாமி கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

அகில இலங்கை சைவ அனுட்டான பாதுகாப்புச் சபையும் கீரிமலை அபிவிருத்தி திட்டம் சம்பந்தமாகத் தெரிவித்திருந்த யோசனை பற்றியும் இத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது

பருத்தித்துறை சந்தையில்

## போதிய உணவின்றி இறந்து கிடந்தார்

வல்வெட்டித்துறை, சனி

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கந்தசாமி என்னும் வயோதிபர் பருத்தித்துறைச் சந்தைக் கட்டிடத்தில் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் மரண விசாரணை செய்து பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டார். பிரேத பரிசோதனை நடத்

காய்ந்து மரணம் சம்பவித்ததெனக் கூறியதைத் தொடர்ந்து மரண விசாரணை அதிகாரி இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்தார்.

இறந்தவரின் சடலத்தை எவரும் பொறுப்பேற்க வராததால் பருத்தித்துறையைச் சேர்ந்த கே. தந்தை எஸ். சர்வானந்தம், என். சிவலிங்கராசா, ஏ. அமுதராசா ஆகியோர் பணஉதவி

மூட்டிக் கொண்ட இவர் அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக் ...யதரிசியுதாண்ட் தெரிவித்துள்ளார்.

# 'நேட்டோ' கருத்துக்கு கனடா இணங்கும்?

ஒட்டாவா, மே 31

ஐரோப்பாவிலிருந்து கனேடிய படைகளை விலக்கிக் கொள்வதற்கு செய்துள்ள முடிவை 'நேட்டோ' வின் இதர அங்கத்துவ நாடுகளுக் கிணங்க மறு பரிசீலனை செய்யப் போவதாக கனடா பிரதம மந்திரி திரு. தியூடோ அறிவித்திருக்கிறூர்.

ஐரோப்பாவிலிருந்து தன் படைகளை விலக்கிக் கொள்வதற்கு கனடா முடிவு செய்துள்ளது பற்றி அண்மையில் பிரஸல்ஸில் கூடிய 'நேட்டோ' நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களின் கூட்டத்தில் பெரிதும் குறை கூறப்பட்டது

இதற்கிடையில் கனடா தனது படைகளை ஐரோப்பாவிலிருந்து விலக்கிக் கொள்ளும்பட்சத்தில் 'நேட்டோ' மிக விரைவிலேயே அணு ஆயுதங்களை உபயோகிக்க நேரும் என்று பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் திரு ஹீலே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## மே. ஜெர்மனி எதிர்க்காது

பொன், மே 30

கிழக்கு ஜெர்மனியை அங்கீகரிக்க ஏதாவதொரு நாடு முடிவு செய்யுமாஞல் அந்த நாட்டுடனூன மேற்கு ஜெர்மனியின் உறவுகள் அறுந்து போய்விட்டதாக இனிமேல் கருதப்படமாட்டாது.

மேற்கு ஜெர்மனி மந்திரி சபையினர் சுமார் ஏழு மணி நேரம் நேற்று ஆலோசனைகள் நடத்தியபின்னர் தமது பத்தாண்டு கொள்கையில் மாற்றம் செய்ய முடிவுசெய்தனர்.

பிரி. படைகள்

## பாரசீகக் கடலிலிருந்து விலகுவது உறுதி

லண்டன், மே 31

பாரசீகக் கடற்பிரதேசத்திலிருந்து பிரிட்டன் தனது படைகளை 1971-ம் ஆண்டளவில் முற்றுக விலகிக்கொண்டுவிடும் என்று பிரிட்டிஷ்வெளிநாட்டமைச்சர் திரு. ஸ்டுவர்ட் தெரிவித்திருக்கிறூர்.

திரு ஸ்டுவர்ட் தெஹ்ரானில் நடைபெற்ற 'சென்டோ' மகாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு லண்டன் திரும்பியுள்ளார். பாரசீகக் கடல்பகுதியிலுள்ள படைகள்பற்றிய பிரிட்டனின் முடிவு இறுதியானது என்று அவர் குறிப்பிட்டார்.

யுரை கூறினூர்.

## கோரிக்கை

சுழிபுரம், சனி

காரைநகர் முகாமிலுள்ள கடற்படையினருக்கும் அப்பகுதியிலுள்ள பொது மக்களுக்கும் இடையே ஏற்பட்ட தகராறு பற்றி ஓர் பூரண விசாரணை நடாத்தி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேல் நடவடிக்கை எடுக்கும்படி வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம். கடற்படைத் தளபதியையும் மற்றும் உயர் அதிகாரிகளையும் கோரியுள்ளார்.

## கல்வி அமைச்சருக்கு பாராட்டு

அளவெட்டி, சனி

அகில இலங்கை தொழில் நுட்ப மாணவர் சம்மேளனம் கல்வி அமைச்சரை பாராட்டுகிறது.

தொழில் நுட்ப வியலாளர் பயிற்சிக்கு விண்ணப்பிப்போர் 18 வயதுடையவராக இருக்க வேண்டும் எனகல்வி இலாக உத்தரவு பிறப்பித்திருந்தது.

தொழில் நுட்ப மாணவர் சம்மேளனம் இதை கண்டித்ததுடன் இதை 20 வயதாக கூட்ட வேண்டும் எனகல்வி அமைச்சரை கேட்டிருந்தது.

இதன் பயனூக அமைச்சர் இவ்வயதுக் கட்டுப்பாட்டை 20 ஆக்கியுள்ளார்.

அதிபர் தம் செலவில் அச்சிட்டு நாவலர் சைவப்பிரகாசவித்தியாசாலையில் நடைபெற்றகந்தபுராண விரிவுரைத்தொடரில்வடமாகாண உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை மூலம் இலவசமாக வெளியிட்டனர்.

திரு. முருகேசம் பிள்ளை இங்கு கூறியதாவது: நமது நாட்டில் சைவசமயம் ஆபத்தானநிலையிலிருக்கிறது. சைவம்வேறு தமிழ் வேறு என்ற கருத்தை சிலர் பிரசாரஞ்செய்யத் தலைப்பட்டுள்ளனர். கடலில் வாழும் மீனை வெளியில் எடுத்துவிட்டால் அது உயிர்வாழாது. அதுபோல தமிழிலிருந்து சைவத்தை பிரித்துவிட்டால் சைவம் வாழாது. சைவசமயத்தைச் சேர்ந்த மக்களுக்குள் ஒற்றுமையில்லை. சைவசமயத்துக்கு மாறுன கருத்துக்களையும் சிலர் வெளியிட முன்வந்துள்ளனர். இவ்வாறுன சமயத்தில் சைவர்கட்கு சமய உண்மைகளை செட்டியார் போன்றவர்கள் விளக்க வேண்டும். சைவ சாதனங்களாகிய விபூதி, உருத்திராக்கம். ஸ்ரீபஞ்சாட்சரம் என்பனபற்றி செட்டியாரால்எழுதப்பட்ட நூலை யாழ்ப்பாணம் மில்க்வைற் சோப் அதிபர் அச்சிட்டு இலவசமாக வெளியிட்டுள்ளார். இந்நூலாசிரியரையும், இந்நூல் வெளியீட்டாளரையும் நான்பாராட்டுகிறேளி.

செட்டியாரால் எழுதப்பட்ட 'விநாயகர் வரலாறு' என்னும் நூலையும் மில்க்வைற் சோப் அதிபரே கந்தபுராணப்பூர்த்திப் பிரசங்கத்தின்போதுஇலவசமாகவழங்கினர். நாவலர் சபையின் தலைவர் திரு. வே. நாகலிங்கம் அவர்கள் நூலாசிரியராகிய செட்டியரையும் நூல் வெளியீட்டாளர்களாகிய மில்க்வைற்சோப் அதிபரையும் பாராட்டி நூலை வெளியிட்டு வைத்தார்.

## குடிவெறியில் கத்திக் குத்து

திருக்கோணமலை, சனி

மது அருந்திய பின் இருவருக்கிடையில் தகராறு ஏற்பட்டதனுல் ஒருவரை ஒருவர் கத்தியால் பிடரியிலும் வயிற்றிலுமாக மாறிமாறி வெட்டிக்கொண்ட சம்பவமொன்று புல்மோட்டையில் கொக்கிளாய் என்னுமிடத்தில் நடைபெற்றுள்ளது.

வெட்டப்பட்ட இருவரும் பொலிஸாரால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து பொலிஸார் விசாரணைசெய்கின்றனர்.

பிரம்மஸ்ரீ சு. துரைச்சாமிக் குருக்கள் ஆரம்பித்துவைத்தார்.

## 'தமிழே போதனு மொழியாக இருக்கவேண்டும்'

அளவெட்டி, சனி

"அரசாங்கம் பொறுப்பேற்கும் பௌத்த பாடசாலைகளில் தமிழே போதனு மொழியாக இருக்கவேண்டும். பெற்ருேர் விரும்பினுல் சிங்களமும், பௌத்தமும் இரண்டாவது பாடமாகப் போதிக்கலாம்."

இவ்வாறு புரட்சிகர விடுதலை முன்னணியின் கீழ் உள்ள புரட்சிகர மாணவர் வாலிபர் இயக்க யாழ். கிளை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 7 மாடுகளுடன் கைது

யாழ்ப்பாணம், ஞாயிறு

களவாடப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் 7 மாடுகளுடன் மூவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

7 மாடுகளும் யாருடையவை என்று இன்னமும் அடையாளம் காணப்படவில்லை. சந்தேகநபர்களான றஸீக், சல்காம், சின்னத்துரை ஆகிய மூவரும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்கள்,

(கா. நி)

## மரம் நாட்டுவிழா

அராலி, சனி

புளிய மரம் நாட்டுதலை வலி-மேற்குப் பகுதியில் பரவலாகச் செயற்படுத்த அராலி வடக்கு உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் திரு. க. கனகசபை நடவடிக்கை எடுத்துவருகிறூர். இதுசம்பந்தமாக அவர் தரிசு நிலச் சொந்தக்காரர்களோடு தொடர்புகொண்டுள்ளார்.

## கலால் பகுதியினர் நடத்திய வேட்டை

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவைச் சேர்ந்த அளம்பில தூண்டாவில் என்ற இடத்தில் வடிசாராயம் பெருமளவில் உற்பத்தி செய்வதாகக் கிடைத்த இரகசியத்தகவலைக் கொண்டு முல்லைத்தீவு கலால் பரிசோதகர் திரு. கே. பீ. திசனுயக்கா தலைமையில் சென்ற கோஷ்டியினர் 2160 ருறம் கோடாவையும் வடிசாராயம்உற்பத்திக்கான உபகரணங்களையும் வர்ணகுலசூரியா பெர்ஞன்டோஎன்பவரிடமிருந்து கண்டுபிடித்தனர்.

விஷயங்களை பற்றி மட்டும் திருவள்ளுவர் பேசவில்லை ஒவ்வொருவரும் நன்மையுடன் பின்பற்றக்கூடிய நெறிகளையும் அவர் அளிக்கிறூர். இரண்டாயிரம்ஆண்டுகள் பழமையாயினும் திருவள்ளுவரின் வாக்குசாஸ்வதமானது. வரும் நூற்ருண்டுகளில் இந்நாட்டு மக்களுக்கு அது வழிகாட்டிவரும்.

தமிழ் இலக்கியத்தின் பலத்திற்குக் காரணம் யாது? உலக மொழிகளிடையே நீண்ட நாட்களாக உயிர் வாழ்ந்திருப்பதில் முற்றிலும் தனிச்சிறப்புடையதாக தமிழ் விளங்குகிறது. தமிழ் பண்டைய மொழி மட்டுமல்ல. நவீன மொழியுமாகும். தமிழ் இலக்கிய வானில் கம்பன், இளங்கோ போன்ற தாரகைகள் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றனர். பல நூற்ருண்டு முன்னரே சங்க காலத்துப்புலவர் ஒருவர் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று கூறினூர். இதே செய்தியை திருவள்ளுவரும்.

'ஒத்தது அறிவான் உயிர்
வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப்படும்.

என்னும் குறளில் வலியுறுத்துகிறூர்.

நவீன காலத்துககு வருவோமாஞல் இந்திய அரசியல் பொருளாதார விடுதலைக்கு மிகுந்த தீரத்துடன் போரிட்டவரானசுப்ரமண்ய பாரதி தமது நாவன்மையால் தேசீய உணர்வை தட்டி எழுப்பிஞர். அவருடைய தேசபக்தி பாடல்களும், தத்துவப் பாடல்களும் மிகச் சிறப்பான கவிதைத் திரட்டுகளில் ஒன்ருகும். பாரதி பின்பற்றிய உயர்ந்த லட்சியங்களும் அவருடைய கவிதைகளின் வேகமும் அவர் பின்பற்றி வாழ்ந்த விதமும் இன்று கூட எழுத்தாளர்களுக்கு ஊக்கமளித்து வருகின்றன. தமது புராதன நாட்டின் கௌரவத்தையும் அதுஇருப்பதன் காரணத்தையும் வருங்காலத்தையும் பற்றி மீண்டும் எடுத்துரைப்பது அறிவாளிகளைச் சார்ந்ததாகும். உலக சமுதாய கூட்டமைப்பு ஒன்றின் அடிக்கல்லை நாட்டுவதற்கு தேவையான கருத்துக்கள் உருவாவதற்குவேண்டிய சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதும் அவர்களைச் சார்ந்ததாகும்.

தமிழ்நாட்டின் எழுத்தாளர்களைப் பற்றி நான் நினைக்கும்போதுபலருடையபெயர்கள் நினைவுக்கு வருகின்றன. ராஜாஜியும், அண்ணுதுரையும் இவர்களில் பிரதான மானவர்கள். தமிழில் பண்டிதர் நடையை கைவிட்டு சாதாரண மனிதனும் புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் அவர்கள் எழுதிஞர்கள். மிகச் சிக்கலான சிந்தனைகளை

பட்டார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் மரண விசாரணை செய்து பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டார். பிரேத பரிசோதனை நடத்திய டாக்டர் எஸ். கதிர்காமத்தம்பி இறந்தவர் போதிய உணவின்றி உடல்

இறந்தவரின் சடலத்தை எவரும் பொறுப்பேற்க வராததால் பருத்தித்துறையைச் சேர்ந்த கே. தந்தை எஸ். சர்வானந்தம், என். சிவலிங்கராசா, ஏ. அமுதராசா ஆகியோர் பணஉதவி அளித்துச் சடலத்தைத் தகனம் செய்தனர்.

## இலக்கிய கர்த்தாக்கள் தீர்க்கவேண்டிய குறை

அளவெட்டி, சனி

"சிறுவர்களின் புத்துணர்ச்சிக்கான இலக்கியங்கள் இன்று எம்மிடையே இல்லாதது பெரும் குறையாகும். இக்குறையை எம்மிடையே உள்ள இலக்கிய கர்த்தாக்கள் நீர்த்து வைத்து சிறுவர்களின் புத்துணர்ச்சிக்கு உதவவேண்டும்."

இவ்வாறு தெல்லிப்பழை கிழக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை ஸ்தாபகர் நினைவு விழாவும், பெற்ருர்தின விழாவும் சென்ற புதன் கிழமை வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற போது "வாழ்வில் இலக்கியம்" என்னும் பொருள் பற்றி சிறப்பு சொற்பொழிவாற்றிய மயிலை சிவசண்முகதாசன் கூறினூர்.

வித்தியாலய அதிபர் திரு. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. சிவசண்முகதாசன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

முற்காலத்தில் இலக்கியம் என்ருல் என்ன? அதனுல் என்ன பயன்? என்பதைப் பற்றி மக்கள் அறியவில்லை. சென்ற 100ஆண்டுகளுக்குப் பின் மக்கள் வாழ்ந்த தான் இலக்கியம் என்ருல் கதையல்ல, அறிவுக்களஞ்சியம், அறிவைப் பெருக்கும் கருவி என அறிந்தனர். வாழ்க்கையுடன் இணைந்துள்ள இந்த அறிவுக்களஞ்சியம் எனப் போற்றப்படும் இலக்கியங்களை இன்று ஆக்கித் தருவோர் குறைந்துள்ளனர். இந்நிலை மாறவேண்டும்.

தொழிலாளரின் இன்னல்கள் எல்லாவற்றையும் ஒன்ருகத் தொகுத்து மேலை நாடுகளில் இலக்கியங்களை ஆக்கியுள்ளனர். இதைப் பின்பற்றி எமது இலக்கிய கர்த்தாக்களும் இது போன்ற புதுவித இலக்கியங்களை எமக்களிக்கவேண்டும்.

ஒருவனுக்கு குடும்பத்திஞல் வரும் பண்பாடு அவனது இறப்புக் காலம் வரை இருக்கும். இதைத்தான் உளவியல் குறிப்பிடுகின்றது. அறிஞர்கள் இவ் உளவியலைப் படித்து மாணவர்கள் எல்லோரும் பண்பாளராகத் திகழ வழி அமைக்க வேண்டும்.

நல்ல பண்புகளை வளர்க்க இலக்கியம் உதவவேண்டும். காங்கேசன்துறை வட்டார கல்வி அதிகாரி திரு. க. சோமசுந்தரம் பேசுகையில், ஆசிரியர்களுக்கு இன்று மக்களிடையே மதிப்பில்லை. இதற்குக் காரணம் சம்பளக் குறைவு தான் என்றும் இந்நிலை தொடர்ந்தும் இருக்காமல் வருங்கால சமுதாயத்தை நல்ல முறையில் உருவாக்கும் ஆசிரியர்களுக்கு மதிப்பளிக்க வேண்டுமெனக் குறிப்பிட்டார். திருமதி.க. சோமசுந்தரம் பரிசில்கள் வழங்கிஞர். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## தினவரவு இடாப்பு திருட்டு

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவு வட்டாரக் கல்வி அதிகாரியின் நிர்வாகத்தின் கீழ் உள்ள வலையன் மடம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு உரித்தான தினவரவு டாப்புகளை களவாடி விட்டனராம் என்று மேற்படி பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. யோ. தாவீது முல்லைத்தீவுப் பொலிசாருக்கும் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. செ. கந்தையாவுக்கும் முறைப்பாடு செய்துள்ளார்.

## திடீர்சோதனை

மீதோட்டமுல்லை, ஞாயிறு

கொழும்புநகரில் உள்ள சகலபொலிஸ் நிலையங்களும் வடிசாராயம், கசிப்பு, கஞ்சா போன்ற பொருட்கள் பல ஹோட்டல்களில் சட்டவிரோதமாக விற்பதைத் தடுப்பதில் தீவிரமாகமுனைந்துள்ளன

இந்தநடவடிக்கை காரணமாகதெமட்டக்கொடையில் 45 கசிப்புப் போத்தல்கள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டன. தெமட்டக்கொடைப் பொலிசார் இதுசம்பந்தமாக ஒருவரைபொலிஸ் பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

கொச்சிக்கடையிலும் பல ஹோட்டல்கள் பொலிசாரால் திடீர்சோதனைக்குள்ளாக்கப்பட்டன. (வி. நி.)

# உள்ளூர் பிரஜைகளால் தொழில் நடத்த இயலவில்லை

## கென்யாவில் அந்நியர் மீதான கெடுபிடி தளர்கின்றது

நைரோபி மே. 31

கென்யாவில் தேசியமயமாக்கப்பட்ட பல தொழில்களை ஏற்று நடத்தக்கூடிய பிரஜைகளே இல்லையாம். இதனுல் வெளிநாட்டுவர்த்தகர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த வெளியேற்ற அறிவித்தல்கள் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளன.

கென்யாவில் பிரஜா அந்தஸ்து பெருத வர்த்தகர்களுக்கு பிறப்பிக்கப்பட்டிருந்த பல வெளியேற்ற நோட்டீஸ்கள் வாபஸ் பெறப்பட்டுள்ளன.

வெளியேற்ற நோட்டீஸ்க்ள் வாபஸ் பெறப்பட்ட தகவலை கென்யா ஆட்சி மன்றத்தில் வெளியிட்ட அட்டர்னி-ஜெனரல் சார்லஸ் ஜோன்ஜோ அதற்கான காரணங்களையும் வெளியிட்டார்.

வர்த்தக மந்திரி சார்பில் திரு. ஜோன்ஜோ வெளியிட்ட மூன்று காரணங்கள் பின்வருமாறு:.

1. வர்த்தகர்கள் தாக்கல் செய்த அப்பீல்கள் இன்னமும் பைசலாகவில்லை. 2. சில நோட்டீஸ்கள் கென்யா பிரஜைகளுக்கு கைப்பிசகாக பிறப்பிக்கப்பட்டுள்ளன. 3. இவ்வர்த்தக நிறுவனங்களில் சில, கென்யா பிஜைகளுடன் கூட்டாக சேர்ந்து நடத்தப்படுபவையாக விருக்கின்றன.

சிலபகுதிகளில் இத்தகைய முக்கியமான வியாபாரத்தை ஏற்று நடத்தக் கூடிய கென்யா பிரஜைகள் இல்லை, இந்நிலையில் வெளியேற்ற நோட்டீஸ்களை வாபஸ் பெருவிடில். கென்யா மக்கள் தான் கஷ்டப்படுவார்கள்.

நமக்கு நாமே நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும். சில பகுதிகளில் சில வியாபாரங்களை நடத்தக்கூடிய பிரஜைகளே இல்லை என்பதை நாணயமாக ஏற்க வேண்டும். சில ஆட்சிமன்ற அங்கத்தவர்களே கூட தங்கள் பகுதிகளில் கென்யா பிரஜைகளல்லாதவர்கள் கடைகளை நடத்த அனுமதிக்கக் கோரியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

இருளுக்கும் ஒளிக்குமிடையில் மனிதன் போராடிக்கொண்டேயிருக்கவேண்டியிருக்கிறது. ஆண்டவனைத் தஞ்சம் அடைவதாலேயே அவன் ஒளியைக் காணமுடிகிறது. — மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 389

யாழ்ப்பாணம், சௌமியவருஷம் வைகாசி மாதம் 19-ந் திகதி (1-6 69)


## ஆத்ம சோதனை

ஆர்ப்பாட்டம் நடக்கும், சத்தியாக்கிரகம் செய்வார்கள், கிளர்ச்சிகள் நடைபெறும் என்றெல்லாம் தேவையில்லாமல் பெரிதுபடுத்தப்பட்டவிஷயம் இன்று அமைதியாக நடைபெறவிருக்கிறது. ஆமாம் வடபகுதியிலுள்ள மூன்று பௌத்த பாடசாலைகளையும் அரசாங்கம் இன்று பொறுப்பேற்கவிருப்பதைத்தான் குறிப்பிடுகிறோம்

அச்சுவேலி, அல்வாய், கரவெட்டி ஆகிய மூன்று இடங்களிலுமுள்ள மூன்று பௌத்தபாடசாலைகளும் இதுவரை இருந்து வந்துள்ளதைப்போலவே தமிழ்மொழியே அதாவது அங்கு கல்விகற்கும் பிள்ளைகளின் தாய்மொழியே போதனாமொழியாக இருக்கும் நிலையில் இன்று கல்வி அமைச்சினால் பொறுப்பேற்கப்படுகிறது.

அகிலஇலங்கை பௌத்த காங்கிரசினால் அமைக்கப்பட்ட இந்தப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பதை யாரும் இப்போதுஎதிர்க்கவில்லை. கிறிஸ்தவக்கல்லூரிகள், இந்துக்கல்லூரிகள் அமைக்கப்பட்டது போலவே இந்த பௌத்த பாடசாலைகளும் அமைக்கப்பட்டன. 1961ம் ஆண்டில் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றபோது வடபகுதியில் சில கிறிஸ்தவப் பாடசாலைகள் தனித்தியங்கத் தீர்மானித்து தொடர்ந்து தனித்து இயங்கி வருகின்றன. இந்துப்பாடசாலை ஒன்றுகூடத் தனித்தியங்கும் நிலையில் இன்றும் இல்லை. இந்துக் கலாசாரத்தையும் இந்து சமூகத்தையும் வேதாகமங்களையும் பாதுகாத்து வரவேண்டுமெனக் கூறும் இந்துப்பெரியார்களோ, ஸ்தாபனங்களோ, சங்கங்களோ ஓர் இந்துப்பாடசாலையைக்கூட அரசாங்கத்திடம் ஒப்படைக்காமல்தனித்து நடத்த முன்வரவில்லையென்

தமிழ்ச் சகோதரர் முன்வரவில்லையே! சிறுபான்மைத் தமிழ்ச்சகோதரர் மீதுகுற்றம் குறை காண்பதற்குமுன்னரும்பௌத்தத்தையும் சிங்களத்தையும் சந்தர்ப்பமறிந்து திணிக்க முயல்கிறார்களென்று அரசாங்கத்தின் மீதும் மற்றவர்கள் மீதும் குறை குற்றம் சொல்வதற்கு முன்னரும், "'நமது குறைகுற்றங்கள் என்ன, அவற்றை நிவர்த்திசெய்வதற்கு வழியென்ன'' என்பதை பெரும்பான்மைத் தமிழ்ச்சமூகத்தினர் அதாவது தீண்டாமை ஒழிந்தால் வேதாகமம் கெட்டுப்போய் விடுமே யென்று கூறும் இந்நுப் பெரியார்கள் ஆத்மபரிசோதனைசெய்து கொள்ளவேண்டும். இந்து சமூகத்துக்கே தமிழினத்துக்கேஆபத்து வருமானால் வேதாகமத்தை எப்படிக் காப்பாற்றுவதென்பதையும் யோசிக்கவேண்டும்.

ஹரிஜனர்கள் சம்பந்தமாக அரசாங்கமும் மற்றையோரும் ஆசைவார்த்தை காட்டி நயவஞ்சகமாக நடந்துகொள்வதாக சிறுபான்மைத் தமிழருக்கு எச்சரிக்கை செய்வதில் பயனில்லை. பிறர் ஆசை வார்த்தை காட்ட இடமளிக்காமல் நடந்துகொள்வதில் தான் விவேகமிருக்கிறது. ஹரிஜனமக்களின் முன்னேற்றத்தில் அரசாங்கத்துக்குஉண்மையான அங்கறையிருக்குமானால் என்னென்னவோ செய்யலாமே என்று கூறுவதிலும் அர்த்தமில்லை' அவர்கள் அப்படித்தான் செய்வார்கள் ''நாம் என்னசெய்ய வேண்டும்'' என்பவதத்தான் பெரும்பான்மைத் தமிழர்கள் சிந்தித்து செயலாற்ற வேண்டும்.

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நந் நயம் செய்துவிடல்'' என்று கூறிய வள்ளுவரின்விழாவையும் கருணையையும் அன்னபயும் போதித்துபிறரின் துன்பத்தை உணர்ந்து துன்பத்தி

## "கிராமசபை நிர்வாகத்தில் அரசியல் பிரச்னை கூடாது"

### கோப்பாயில் ஜி. ஜி.

கோப்பாய், சனி

'ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கான கிராமசபை நிர்வாகத்தில் அரசியல் பிரச்னைகள் தலை தூக்கக் கூடாது. கிராமசபை அக்கிராமத்தின் நலனையும், அதன் பொருளாதார, சுகாதார முன்னேற்றங்களை கருத்திற்கொண்டு இயங்குதல் வேண்டும்.''

இவ்வாறு கோப்பாய் கிராமசபையின் முன்னாள் தலைவர் திரு. சின்னத்துரையின் உருவப்படத்தை திரைநீக்கம் செய்துவைத்துப் பேசுகையில் யாழ்ப்பாணம் எம். பி.யும் தமிழ்க்காங்கிரஸ் தலைவருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறினார்.

கிராமசபை அலுவலத்தில் தலைவர் திரு. பரமானந்தராசா தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசுகையில் இக்கிராமத்தின் முன்னேற்றத்திற்கு தேவையான சகல உதவிகளையும் என்னாலான வரை செய்ய ஆயத்தமாக உள்ளதாகக் கூறினார்.

தலைவர் தமது உரையில், நாட்டின் நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறவும் நாட்டின் பொருளாதார வளம் மேம்படவும் சபை அங்கத்தவர் முன்னின்று உழைத்து சமூக சேவையாற்ற முன்வரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

அட்வக்கேட் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன், 6-ம் வட்டார அங்கத்தவர் திரு. பொ. தி. சம்பந்தர் உட்பட பலர் பேசினர். கிராமசபை பிரதமலிகிதர் திரு. எஸ். இராசா நன்றியுரை கூறினார்.

## யாழ்ப்பாணத்தில் மீலாத் விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மஸ்ற உத்தீன் வித்தியாலய மாணவமாணவிகள் 29 5-69 பிற்பகல் 4மணிக்கு வித்தியாலய ஆசிரியர்களதும் லெப்பைமார்களதும் உதவியுடன் ஒரு நீண்ட வரிசையுள்ள ஊர்வலத்தை ஏற்படுத்தியிருந்தனர். சுமார் 500க்கு மேலான மக்கள் கலந்துகொண்டனர். இவர்கள் நபிபெருமான் (ஸல்) மீது புகழ்பாடிச் (ஓதி) சென்றனர். ஜின்னாமைதானத்தில் அமைந்துள்ள மைய வாடிவரை சென்று பிரார்த்தனை செய்தனர். யாழ். மன்பஉல் உலூம் முஸ்லிம் வித்தியாலய மாணவ மாணவிகளும் ஆசிரியர்களும் லெப்பைமார்களுமாகப் பெருந்தொகையான கூட்டம் ஊர்வலமாகச் சென்றது. வித்தியாலய முன்றலில் ஊர்வலம் ஒழுங்காக நின்றது. வித்தியாலயக் கொடிகள் முன்னும் பின்னுமாகப் பறந்து கொண்டிருந்தன. பாதிஹாவுடன் பவனி ஆரம்பமானது. மாணவிகள் நாயகம் (ஸல்) மீதுயாசெய்ய தீமாலையைப் பாடிக் கொண்டு முகியித்தீன்பள்ளி

குளத்தடிப்பள்ளிப் பந்தல் இதுவும் முஸ்லிம் கல்லூரித் தொங்கலில் ஒஸ்மானியாக் கல்லூரி அமைந்துள்ளது. ஜின்னாவீதி, ஆசாத்வீதி அபூபக்கர் வீதி' மானிப்பாய் வீதி, முசதீன் பள்ளி வீதி, காமால் வீதி, ஐதுறூஸ் மகாம் வீதி, பிரப்பங்குள வீதி கலீபா அப்துல் கமீது வீதி, கலீபா அசனாலெப்பை வீதி ஆகிய இடங்களும் சிறுச்சிறு கொடிகள் பந்தல்களால் அலங்காரஞ் செய்யப்பட்டிருந்தன. இவைகளைப் பார்வையிடும் போது ஆண்களும் பெண்களும் கஷ்டமுறு வண்ணம் சேவையாளர் போதிய ஒழுங்குகளையும் உதவிகளையும் செய்வதற்குப் பணிக்கப்பட்டுள்ளனர். பிற்பகல் தொடக்கம் தினமும் இசைக் கீதமும்இஸ்லாமிய கீதமும்ஒவ்வொரு பந்தல்களிலும் நடைபெறுகின்றன. இராக்காலங்களில் மௌலூதுகள் கதாப் பிரசங்கங்கள் உபந்நியாசங்கள் முதலானவை நிகழ்ந்து வருகின்றன. இவைகள் யாவும் அண்ணல் நபியின் அழ[illegible] பமை[illegible] ழ்கின்றன.

## சீதன தகராறால் இளம் பெண் தற்கொலை

புலோலி, சனி

துன்னாலை தெற்கு வாசியான சிவபாதம் பெண் பொன்னம்மா (வயது 24) சென்ற 27-ந் திகதி நச்சுத் திராவகம் அருந்தியதால் மயக்க நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

இவரின் மரணம் சம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் மரணவிசாரணை நடத்தினர். மரண விசாரணையில் இறந்தவர் திருமணம் செய்து இரு வருடங்கள் என்றும் இவருக்கும் கணவனுக்கும் சீதனம் சம்பந்தமாக ஏற்பட்ட தகராறினால் இறந்தவர் நச்சுத் திராவகம் அருந்த ஏற்பட்டதாகவும் இறந்தவரின் தகப்பனார் சின்னையா முருகேசு (வயது 48) சாட்சியமளிக்கையில் கூறினார்.

இறந்தவரை பிரேத பரிசோதனை செய்த டாக்டர் திரு. சிறீரங்கலிங்கம் நச்சுத் திராவகம் அருந்தியதால் இறக்க நேரிட்டது என சாட்சியமளித்தார்.

மரணவிசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## "விஞ்ஞான முறையில் விவசாய கல்வியை போதிக்கவேண்டும்"

உடுவில், சனி

'இலங்கைப் பொருளாதாரம் வளர்ச்சிபெற மூன்று படிகள் உள. ஒருமுறை மழைபெய்து பயிர்கள் வளர்ந்து நல்ல விளைவைக் கொடுத்துவிட்டால் நமது நாடு பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்து விட்டதென்று கருத்தல்ல. நெடுந் தவணையில் தேசிய வருமானம் அதிகரித்து சென்றால் தான் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டதென்று கருத்து. விவசாயம், கைத்தொழில், அரசாங்கதுறை ஆகிய மூன்றுபடிகள் மூலமே வளர்ச்சிபெற வாய்ப்பு உண்டு.

இலங்கை விவசாயத் துறையில்முன்னேற போதிய வாய்ப்பு உண்டு. தேசிய அரசாங்கம் இதற்கு மிகுந்த ஊக்கமளித்து வருகின்றது. இளைஞர்களுக்கு கணிதம், விஞ்ஞானம், விவசாய பாடங்களை கற்பித்தல் அவசியம். ஆறும் வகுப்புமுதல் சகல பாடசாலைகளிலும் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்கள் கற்பித்தல்வேண்டும். விஞ்ஞான முறையில் விவசாயக கல்வியை இளைஞர்களுக்கு ஊட்டுவதனால் விவசாய அபிவிருத்தியைப் பெறமுடியும்.'

சுன்னாகம் பட்டின சபையின் ஆதரவில் நூல்நிலையக் குழு நடத்திய கருத்தரங்கு ஒன்றில் பேசிய இலங்கை போக்குவரத்துச்சபை அங்கத்தவர்களில்ஒருவரான திரு பி. சங்கரப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

திரு. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் திரு. பி. சங்கரப்பிள்ளை 'இலங்கைப் பொருளாதாரமும், யாழ்ப்பாண வாலிபர் பங்கும்' என்ற தலைப்பில் உரைநிகழ்த்தினார். திரு. சங்கரப்பிள்ளை தமது உரையில் மேலும் கூறியதாவது;

விவசாயம் மட்டுமல்ல; கைத்தொழிலிலும் கவனம் செலுத்தவேண்டும். கைத்தொழில் வளர்ச்சியேபொருளாதார வளர்ச்சியின சுட்டுஎண். கைத்தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருட்கள் இங்கு இல்லாவிடினும் சிறுசிறு கைத்தொழில்களாவது ஆரம்பிக்கவேண்டும். இதற்கு ஒவ்வொரு உள்ளுராட்சி மன்றங்களும் சிறுவீத கைத்தொழில் ஆரம்பிக்க ஊக்கமளிக்கவேண்டும்.

யாழ்பபாண இளைஞரைப் பொறுத்தவரையில் அவர்களின் மனம் மாற்றமடைதல் மிக அவசியம். பழைய பழக்கவழக்கங்களும், பொறாமை மனப்பான்மையும் நம்மிடையே அதிகம் உண்டு. இவைகள் ஒழிக்கப்படவேண்டும். சமூக ஒற்றுமை ஏற்படவேண்டும் நமது உற்பத்திகளை நாமே உபயோகிக்க முன்வரவேண்டும் இவற்றினால் தான் யாழ்ப்பாண இளைஞர் முன்னேறமுடியும்.

## 'தமிழ் மாணவர்கள் ஆங்கிலமும் கற்கவேண்டும்'

## தண்ணீர் படாப்பாடு

சமீபத்தில் வெளியான 'ஆனந்தவிகடன்' பத்திரிகையில் பிரபலமான நகைச்சுவை எழுத்தாளர் 'நாடோடி' ஒரு சிரிப்பான கதை எழுதியிருக்கிறார். அது எப்படி என்றால்: சென்னை பட்டினத்திலுள்ள சங்கீதசபை ஒன்று வெளியூரில் வசிக்கும் ஒரு ஜலதரங்க வித்வானை கச்சேரிக்கு வரும்படி அழைத்திருந்தது அந்த அழைப்பில் வித்வான் ஒரே ஒரு நிபந்தனையை மட்டும் நிறைவேற்ற வேண்டுமென்று சபைக் காரியதரிசி குறிப்பிட்டிருந்தார். வித்வான் அந்த ஒரே ஒரு நிபந்தனையை வாசித்துவிட்டு, 'ஐயையோ, இந்த நிபந்தனையை நான் ஏற்றுக்கொண்டு நிறைவேற்ற முடியாது. அப்படி செய்வேனேயானால் இவ்வூர் மக்கள் எல்லோரும் ஒன்றுகூடி என்னை ரயிலேற விடமாட்டார்கள். ஆகையால் அந்த நிபந்தனையை வாபஸ் பெறுங்கள்' என்று மறுமொழி எழுதினார். சங்கீதசபையினர் அதை நிறைவேற்றித் தான் ஆக வேண்டும் என்று திருப்பி எழுதினார்கள். வித்வான் முடியவே முடியாது என்றுஎழுதிவிட்டார். கடைசியில் அந்த ஒரே ஒரு நிபந்தனையை ஏற்றுக் கொள்ளாத எந்த ஜலதரங்க வித்வானையும் கச்சேரிக்கு அழைப்பதில்லை என்று சங்கீதசபை ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றிவிட்டு அவருடைய கச்சேரியை ரத்து செய்தது.

நிபந்தனை என்ன தெரியுமா? வித்வான் கச்சேரிக்கு வரும்போது கோப்பைகளுக்கு விடும் தண்ணீரையும் கொண்டு வரவேண்டும் என்பதுதான்!

சென்னை நகரிலும் தமிழ்நாட்டின் சில வெளியூர்களிலும் இம்மாதங்களில் நிலவும் கடும் வறட்சியையும் அதனால் உண்டாகும் தண்ணீர் பஞ்சத்தையும் சித்தரிக்கும் இந்தக் கதையை வாசிக்க முதலில் சிரிப்பும் பிறகு பரிதாபமும் ஏற்படுகிறதல்லவா?

புதிய சினிமாப்படம் ஒன்று காட்டப்படும் முதல் நாள் பகல் பன்னிரண்டு மணிக்கு தியேட்டருக்குமுன்னால் நமது யாழ்ப்பாணத்து இளைஞர்கள் கியூபோட்டு நிற்பதுபோல, சென்னை பட்டினத்து குழாய்களுக்கு எதிரே பெண்கள் குடங்களையும் வைத்துக் கொண்டு காவல் புரிவதைப் பார்த்தவர்களுக்கு இந்த உண்மை புலப்படும்.

அங்கு மட்டுமென்ன? நீர்வளம் மிக்க நமது இலங்கையும் என்ன குறைவா?

தீவுப்பகுதிகளில் இப்பொழுது போய்ப் பாருங்கள்! குடங்களைச் சுமந்துகொண்டு நூற்றுக்கணக்கான பெண்கள் மைல் கணக்காகநடந்து சென்று நல்ல தண்ணீருக்கு போவதைக் காணலாம். சில இடங்களில் குடிநீர் ரேஷன் பண்ணிக் கொடுக்கப்படுகிறது. வேறு சில இடங்களில் கலன் இத்தனை ரூபாய் என்று விற்பனை செய்யப்படுகிறது. வருடத்தில் நூறு அங்குலத்துக்கு மேல் மழை வீழ்ச்சியுள்ள கொழும்புப் பகுதியிலேயே லபுகம நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் குறைந்துவிட்டால் களனி ஆற்றுத் தண்ணீரைத்தான் குழாய்களில் விடுகிறார்கள்.

மனிதனுக்கு மிகவும் இன்றியமையாத இரண்டு பொருட்களாகிய காற்றை

### நாட்டிலும் நகரிலும்

யும் நீரையும் ஆண்டவன் எதேஷ்டமாகப் படைத்திருக்கிறான். கடவுளே என்று சாற்றுக்கு இன்னும் பஞ்சம் ஏற்படவில்லை. தண்ணீர்க்குறை என்ன குறை? பூமியில் பெரும்பகுதி நீரல்லவா? வானத்திலிருந்து மழை வேறே கொட்டுகிறது. அப்படியிருந்தும் இந்த இருபதாம் நூற்றாண்டில் ஜனங்கள் குடிநீர் இல்லாமலே தவிக்கிறார்கள் என்பதை நினைக்க ஆச்சரியமாயிருக்கிறது.

ஆயிரம் கோடி செலவில் அணுக்குண்டுகளைத் தயாரிக்கிறார்கள். கோடானு கோடி செலவில் சந்திரனுக்குத் தாவுகிறார்கள். இங்குள்ளவர்களுக்குக் குடிக்க தண்ணீர் கிடையாது!

சமுத்திரத்திலிருக்கும் உவர் நீரை நன்னீராக்க எங்கள் அணுசக்திவிஞ்ஞானிகளுக்கு இன்னும் தெரியவில்லையே!

'எங்கு பார்த்தாலும் தண்ணீர் குடிப்பதற்கு ஒரு மிடறுமில்லை' என்று நடுக்கடலில் தத்தளித்தவன் புலம்பியது போல புலம்பிப் போட்டு இருக்க வேண்டியதுதானா?

— வழிப்போக்கன்

## முன்னேற்றப் பாதையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாகமங்களையும் பாது காத்து வரவேண்டுமெனக் கூறும் இந்துப்பெரியார்களோ, ஸ்தாபனங்களோ, சங்கங்களோ ஓர் இந்துப்பாடசாலையைக்கூட அரசாங்கத்திடம் ஒப்படைக்காமல்தனித்து நடத்த முன்வரவில்லையென்பது கசப்பான உண்மை.

வடபகுதியில் தொடர்ந்து தீண்டாமையைக் கடைப்பிடித்து வருபவர்களின்செயல் காரணமாக கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்து விமோசனம் பெற்றவர்கள் சிலரின் முன்மாதிரியைக்கொண்டு பௌத்த மதத்தில் சேர்ந்து விடிவு பெறலாமென்ற நம்பிக்கையுடன் சிலர் பௌத்த மதத்தைத்தழுவி பௌத்த காங்கிரசின் உதவியுடன் மூன்று பாடசாலைகளை வடபகுதியில் நிறுவினர். பௌத்தபாடசாலைகளை இங்கு நிறுவுவதற்கு வேறு காரணங்களிருப்பதாகச் சிலர்கூறிய போதிலும் பௌத்தபாடசாலைகள் நிறுவப்பட்ட பின்னரும் இப்பகுதியில் தீண்டாமை ஒழிவதாகக் காணும் என்ற நிலையில் சிங்களத்தையே போதனாமொழியாக ஏற்று சிங்கள பௌத்தர்களாக மாற முயற்சி செய்தாலாவது இங்குள்ள பெரும்பான்மை தமிழ்ச்சமூகத்தினரது மனம் மாறுதா என்ற நிலையில்இந்த நடவடிக்கைக்குத் தயாராகியிருக்கலாம்.

இந்த நிலையிலும்கூட தீண்டாமைக்கு ஒரு முடிவுகட்டி தமிழ் மக்கள் அனைவரும் ஒரு தாயின்பிள்ளைகளென்று ஏற்று அந்நியர் வந்து புகாமல் தடுக்க பெரும்பான்மைத் வேண்டும்.

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நந்நயம் செய்துவிடல்'' என்று கூறிய வள்ளுவரின்விழாவையும் கருணையையும் அன்பையும் போதித்துபிறரின் துன்பத்தை உணர்ந்து துன்பத்திலிருந்து விடுதலைபெற வழிகாட்டிய கௌதம புத்தரைப் பின்பற்றிய புத்தமதம் இலங்கைக்கு வந்த தினமான போஸன் தினத்தையும் சகோதரத்துவத்தைப் போதித்த நபிபெருமானார் (ஸல்) அவர்கள் உதித்த திருநாளையும் கஷ்டப்படும் மக்களுக்கு அருள்புரியும் அர்ச். அந்தோனியார் திருநாளையும் கொண்டாடும் பல்வேறு சமய இன மக்கள் வாழும் இந்நாட்டில் அமைதியை நிலைநாட்டி ஐக்கியத்தை நிலவச் செய்வது பெரிய விஷயமல்ல சமய அறிவுடன்நில்லாது சமயத்தை சரியான முறையில் அனுஷ்டித்து வந்தால் அற்பலாபம் கருதி எவரும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள இடமிருக்காது.

ஆர்ப்பாட்டம், கிளர்ச்சி என்று என்னதான் சொல்லப்பட்டபோதிலும் மூன்று பௌத்த பாடசாலைகளிலும் இன்றுள்ள நிலையில் தமிழ்மொழியே போதனாமொழியாக இருக்குமானால் இங்கு எதிர்ப்பு ஏற்படாது. இந்த அமைதி நீடிப்பதும் தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டுவதும் கல்வி அமைச்சினதும் அரசாங்கத்தினதும் கையில்தான் பெருமளவு தங்கியிருக்கிறது.

ஆசிரியருக்குக் கடிதம்

வடபகுதி பௌத்த பாடசாலை விவகாரம்

# சமரசமாகத் தீர்ப்பதே எல்லோருக்கும் நல்லது

வடபகுதியில் பௌத்த பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொள்ளும் விஷயம்சம்பந்தமாகஎதுவித வீண் மனக்கசப்புக்கள் ஏற்படாதவாறு தடுப்பது மிகவும் நல்லதாக இருக்கும் தமிழ் சமூகத்திலும் தமிழ் சமூகத்திற்கும் சிங்கள சமூகத்திற்குமிடையிலும் இந்து பௌத சமூகங்களுக்கிடையிலும் வீணான தப்பெண்ணங்கள்ஏற்படாதவாறு சமரசத் தீர்வுகாண்பதே மிகச் சிறந்ததாக அமையும்.

இது வியஷத்தில் சமாதானத்தீர்வு ஒன்று காணமுடியாவிட்டால் நீதிமன்றத்துக்குப் போய் நல்ல தீர்ப்பை எதிர்பார்ப்பதுவே முறையாக இருக்கும் சட்டங்கள் கூட தமிழர் அல்லாதோர் பெரும்பான்மையினராக அங்கம் வகிக்கும் ஆட்சிமன்றத்தால் மாற்றப்படலாம் என்பதும் நினைவில் இருத்திவைக்கப் படவேண்டியதே.

இதுசம்பந்தமாக நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவது மிகவும் தீமையை விளைக்கும் சம்பந்தப்பட்ட எல்லோருக்குமிடையே மனக்கசப்பை இதுமேலும் வளர்க்குமே தவிர பயனுள்ள நல்ல முடிவையேதும் தராது.

இவ்வித நேரடி நடவடிக்கைகளிலும் மாணவர்கள் ஈடுபடுவது அவர்களுக்கு மிகவும் கெடுதலையேதரும் அத்தோடுஅவர்களின் கல்வியும் பாதிக்கப்படும் பாடசாலைகளில் மாணவர்கள் கற்கும் காலத்தில் வேறு விஷயங்களில்ஈடுபடாது கல்வியில் மட்டுமே கருத் தூன்றச்செய்வதே மிகவும் நல்லதாக விருக்கும்.

பொதுவாக இது விஷயத்துக்கு தேசிய ஐக்கியத்தை சமூக உறவுகளையும் கருத்தில் கொண்டு பரிகாரம் தேடமுயல்வதே நல்லது.

எஸ் சிவசுப்பிரமணியம்
கொழும்பு

இப்பத்திரிகை. ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் [illegible] 1969-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

நின்றது. கொடிகள் முன்னும் பின்னுமாகப் பறந்து கொண்டிருந்தன. பாதிஹாவுடன் பவனி ஆரம்பமானது. மாணவிகள் நாயகம் (ஸல்) மீதுயாசெய்ய தீமாலையைப் பாடிக் கொண்டு முகியித்தீன்பள்ளி வீதி வழியாக ஐதுறூஸ் மகாம்வீதியைக் கடந்து ஆசாத் வீதியை அடைந்தனர். அங்கு ஆசாத் வீதி மீலாத்சங்கத்தினர் குளிர் பானமும் சிற்றுண்டியும் வழங்கினர். அதேவீதியில் எல். ஏ.எஸ். மீரான் சாகிபும் குளிர்பானம் வழங்கினார். பவனியாளர் கலீபா அப்துல் ஹமீது வழியாக ஜின்னா வீதிக்குச் சென்று அதிலிருந்து முஸ்லிம் கல்லூரி வழியாகக் குளத்தடிப்பள்ளி வாசலையடைந்தனர். இங்கும் இவர்களுக்கு குளிர் பானம் வழங்கப்பட்டது.

பின்னர் இவ்விடத்தில் அடங்கியுள்ள ஆத்மாக்களுக்காகப் பிரார்த்தனை செய்யப்பட்டு பாதிஹா துஆவும் ஓதப்பட்டது. பின்னர் அங்கிருந்து முஸ்லிம் கல்லூரி வீதிவழியாகப் புதுப்பள்ளி வாசல் சந்தியையடைந்தது அங்கிருந்து நாவலர் வீதிவழியாக ஜனாப் எம். பஸீரின பந்தலையடைந்தது.அங்கு பவனியாளருக்குக் குளிர் பானம் வழங்கப்பட்டது. குளிர் பானம் வழங்கியஒவ்வொரு இடத்திலும் வித்தியாலய அதிபர் எம். எச். எம். அப்துற்றஸ்ஸாக் நன்றி தெரிவித்தார்.

இறுதியாக வித்தியாலயத்தையடைந்து இனிய சலவாத்துடன் ஊர்வலம் பூர்த்தியடைந்தது.

### பந்தல்கள்

நபி ஜயந்தியைமுன்னிட்டு பின்வரும் இடங்களில் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தப்பந்தல்கள்மின்சார விளக்குகளாற் பல வகைகளில் விநோதமான முறையில் அமைந்துள்ளன.

சிவல் பள்ளிப்பந்தல்: இது முஸ்லிம் கல்லூரி வீதியில் கொட்டடிச்சந்தியின் வடக்கே அமைந்துள்ளது.

புதுப் பள்ளிவாசல் பந்தல் இது நாவலர் வீதியில் இருந்து மேற்கே நாவலர்துறை நோக்கிச் செல்லும் வழியின் சந்தியில் இருக்கின்றது.

பிரசங்கங்கள் உபந்நியாசங்கள் முதலானவை நிகழ்ந்து வருகின்றன. இவைகள் யாவும் அண்ணல் நபியின் அழகிய கருத்துக்களை அடிப்படையாய்க் கொண்டே நிகழ்கின்றன.

### பொதுக்கூட்டம்

அண்ணல் நபியின் ஜயந்தி விழாவையொட்டியபொதுக் கூட்டம் கடந்த வியாழனன்று இரவு அபூபக்கர் வீதியில் அழகாக அமைக்கப்பெற்ற பந்தலிலே சண் அல்ஹாஜ் என். எம். என். மீரான் முகியித்தீன் ஆலிம் தலைமையில் ஆரம்பமானது.

தலைவர் தமது உரையில் சுருக்கமாக அண்ணல் நபி மீதுள்ள அன்பை எவ்வகையில் பெற்றுக் கொள்ளலாம் என்பது பற்றி விளக்கினார். இக்கூட்டம் ஜனாப் எம். எம். றபீக் ஆசிரியரால்கிரு ஆத் ஓதி ஆரம்பிக்கப்பட்டது.

பின்பு மாநகரசபை அங்கத்தவர்களான ஜனாப்கள் எம். ஜி. பஸீர் எம். ஏ. ஸி. எஸ். ஏ. காதர் ஆகிய இருவரும் உரையாற்றினார்கள்.

பின் பாடசாலை மாணவிகள் இன்னிசை மூலம் பெருமானார்நபி (ஸல்)களின் கருத்தமைத்துப்பாடி மக்களைமகிழ் வூட்டினர். இதனையடுத்து சம்மாந்துறை டி. ஆர். ஓ. எம். எம். ஜனாப் மக்பூக் சன்மார்க்க இயக்க தலைவர் ஜனாப் எம். எஸ். ஏ.அஃமது பலாலி கனிஷ்ட பல்கலைக்கழக மாணவர் ஜனாப் வை.மஃறூப் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

இறுதியில் சலவாத்துடன் கூட்டம் நிறைவேறியது.

மு. நி.

## காலி மாநகரசபையிடம் ஆட்சேபம்

காலி, ஞாயிறு

காலியில் பழைய பூங்காவில் இப்போது தர்மபாலா பூங்கா என அழைக்கப்படும் இடத்தில் கசாப்புக்கடையொன்றை அமைப்பதற்கு காலி மாநகரசபை செய்துள்ள முடிவை முன்னாள் கலாச்சார விவகார அமைச்சரும் காலி பௌத்த இளைஞர் சங்கதலைவருமான திரு. டி. எஸ். குணசேகரா ஆட்சேபித்துள்ளார். தமது ஆட்சேபத்தை திரு. குணசேகரா கடிதமொன்றில் காலி மேயர் திரு. டபிள்யூ. டி. எஸ். அபயகுணவர்தனவுக்கு தெரிவித்துள்ளார்.

உத்தேச கசாப்புக் கடை காலிமாநகர மண்டபத்துக்கும் ரயில்வே நிலையத்துக்கும் சமீபத்தில் கட்டப்படவிருக்கிறது.

திரு. குணசேகரா தமது கடிதத்தில் கசாப்புக் கடை கட்டப்படவிருக்கும் இடம் பௌத்த நிலையத்துக்கும் காலி சிவன் கோவிலுக்கும் [illegible] சமீபத்திலிருப்பதாகவும் [illegible]

ஒன்றில் பேசிய [illegible] போக்குவரத்துச்சபை அங்கத்தவர்களில்ஒருவரான திரு [illegible] யாழ்ப்பாண இளைஞர் முன்னேறமுடியும்.

# 'தமிழ் மாணவர்கள் ஆங்கிலம் கற்கவேண்டும்'

அல்லைப்பிட்டி, சனி

இன்று இலங்கையில் ஆங்கிலக் கல்வியின் தராதரம் மிகவும் குன்றிய நிலையில் உள்ளது. முன்னைய மாணவர்களை விட இப்போதைய மாணவர்கள் ஆங்கிலக் கல்வியை வெறுக்கின்றனர்கள் இதற்குக் காரணம் அன்னிய பாஷைகளைவிட சுய பாஷைகளில் ஊக்கம் செல்வதேயாகும். இன்றுள்ள சில அரசியல் வாதிகள் ஆங்கிலத்தை இந்நாட்டினின்றும் ஒழித்து விட்டு சிங்களத்தையே இந்நாட்டு மக்கள் கற்கும்படி நிர்ப்பந்தப் படுத்துவது கவலைக்கிடமான விஷயமாகும். சுய பாஷைகளாகிய தமிழ், சிங்களம் ஆகியவற்றில் மேதைகளாகத் திகழ்ந்தால் மட்டும் போதாது ஆங்கிலத்திலும் மேதைகளாகத் திகழ்ந்தால் ஒவ்வொருவருடைய வாழ்வும் சிறப்பாக அமையும்.''

இவ்வாறு வேலணை மத்திய கல்லூரியில் ஆங்கில வாரத்தை யொட்டி நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போது வடமாநில கல்வி அதிகாரி திருமதி. பாமர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''உலகிலேயுள்ள யாவரும் ஆங்கிலத்தையே அதிக அளவில் பேசுகின்றார்கள். இதனால் ஆங்கிலம் ஓர் உலக பாஷையாகத் திகழ்கிறது. ஒவ்வொரு மாணவரும் ஆங்கிலத்தை நன்றாகக் கற்றுக் கொண்டால் உலகிலுள்ள எந்த மொழிக்காரருடனும் தொடர்பு கொள்ள முடியும், தீவுப்பகுதி மாணவர்கள் ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சியுடைய வர்களாகத் திகழ்வது பாராட்டக் கூடியதே.

வேலணை மத்திய கல்லூரி முன்னைநாள் அதிபர் திரு. ஏ. கந்தையா ஆங்கிலத்தில் இலக்கியம் ''எனும் பொருள் பற்றிப் பேசுகையில்'' ஆங்கிலத்திலே பல அரிய கருத்துக்களடங்கிய இலங்கியங்கள் உண்டென்றும் அவற்றை தமிழ் மாணவர்கள் கற்றுக் கொள்வதன் மூலம் மற்றவர்களுக்கு அடிமையாகாமல் முன்மாதிரியாக விளங்கலாமெனவும் குறிப்பிட்டார்.

இக் கூட்டத்திற்கு வேலணை மத்திய கல்லூரி அதிபர் திரு. ஜே. அரியரெத்தினம் தலைமை வகித்தார்.

ஊர்காவற்றுறை, சனி

ஊர்காவற்றுறையில் உள்ள விறகு காலையில்விறகு கிடைக்காமையால் ஊர்காவற்றுறை, கரம்பன், நாரந்தனை, சரவணைஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் கஷ்டமுறுகின்றனர். இதுபற்றி சுமார் ஆயிரம் பேர் கையொப்பமிட்ட மகஜர் ஒன்று வன இலாகாகூட்டுத்தாபன முகாமையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### விற்பனைக்கு

கந்தர்மடத்தில் 1 3/4 பரப்பு வளவும் வீடும் சகல வசதிகளுடனும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்:- பொ. நா. நடராசா நொத்தாரிஸ், இல: 10, இந்து மகளிர் வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

1165

### பௌத்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென்று தனித்தனியாக நேரடியாகக் கேட்டுக் கொண்டால் இதுபற்றி பரிசீலனை செய்யப்படும்' என்று கல்வி அமைச்சர் நேற்று இதுபற்றிக் கேட்டபோது கூறினார்.

#### ''சிங்கள அதிபர்களை நியமித்தால் பகிஷ்கரிப்போம்''

புரட்சிவாத சமசமாஜக் கட்சி ஆதரவிலுள்ள புரட்சிகர மாணவ வாலிப சங்கச் செயலாளர் திரு. எஸ். விவேகானந்தன் கூறியதாவது;- 3 பௌத்த பாடசாலைகளுக்கும் சிங்கள அதிபர்களை நாளை அரசாங்கம் நியமித்தால் அவர்களைப் பகிஷ்கரிப்போம். அல்வாய் கரவெட்டி, அச்சுவேலி பகுதிகளில் உள்ள பாடசாலைகளை ஒரு கிழமைக்குப் பகிஷ்கரித்து எதிர்ப்பைக்காட்டுவோம்.

அல்வாயிலுள்ள பெற்றோர்களிடமிருந்து தமிழ்தான் போதனாமொழியாக இருக்கவேண்டுமெனக கையெழுத்துச் சேர்த்துவருகிறோம். கரவெட்டி, அச்சுவேலிப் பகுதிகளிலும் பெற்றோர்களிடமிருந்தும் தமிழ்மொழியே போதனா மொழியாக இருக்கவேண்டுமெனக் கையெழுத்து வாங்கத் தீர்மானித்துள்ளோம்.

சிங்களம் போதனாமொழியாகும் தினத்தில் பெரிய அளவில் பகிஷ்கரிப்பு இயக்கம் நடத்த ஒழுங்குசெய்து வருகிறோம்.

ஞல் நமது யாழ்ப்பாணத்து இளைஞர்கள் யூபோட்டு நிற்பதுபோல, சென்னை பட்டினத்து குழாய்களுக்கு எதிரே பெண்கள் குடங்களையும் வைத்துக் கொண்டு [illegible] நடுக்கடலில் தத்தளித்தவன் புலம்பியது போல புலம்பிப் போட்டு இருக்க வேண்டியதுதானா?

— வழிப்போக்கன்

# முன்னேற்றப் பாதையில் மலேஷியாவுக்கு ஏற்பட்ட தடை

யாழ்ப்பாணம் வெள்ளி

மலேசியாவில் நடைபெற்ற சம்பவங்கள் மலேஷியாவின் பொருளாதார முன்னேற்றத்தை பெரிதும்சீர்குலைத்து விட்டதாகவும் முன்னேற்றப் பாதையில் வெகு வேகமாகச் சென்று கொண்டிருந்த மலேஷியாவுக்குஇது ஒரு பெரும் தடையாகி விட்டதாகவும் கோலாலம்பூரிலுள்ள அன்பர் ஒருவர் அனுப்பியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

மலேஷியாவில் நடைமெற்ற பொதுத்தேர்தலின் பின் அதாவது மே10ம் திகதிக்குப் பின் இங்கு ஏற்பட்ட பெரும் கலவரங்களைக் கட்டுக்குக் கொண்டுவருவதற்காக அரசாங்கம் ராணுவத்தினரை அழைக்க வேண்டியேற்பட்டது. 24 மணித்தியால ஊரடங்குச் சட்டமும் பிறப்பிக்கப் பட்டது,

கலவரங்கள் பல இடங்களுக்கும் பரவியதன் விளைவு 10 நாட்களின் பின் 136பேர் மாண்டதாக கணக்கு தெரிவிக்கப் பட்டது .100 வீடுகள் எரித்து சாம்பலாக்கப்பட்டன நூற்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் தீக்கிரையாகின.

கலவரங்களின் போது மாணவர்களின் கல்வியும் பெரிதும் பாதிக்கப்பட்டது. பாடசாலைகள் சில இடங்களில் மூடப்பட்டன. பத்திரிகைகள் பிரசுரிக்கப்படாது தடைசெய்யப்பட்டன. போக்கு வரத்தும் கலவரங்களால்தடைப் படுத்தப்பட்டன.

இந்தக்கலவரம்ஒருஇனக்கலவரம் என்று தான் கூறவேண்டும். மலேஷியாவில்கலவரங்கள் தோன்றினல் பெரிய அளவில் தான் நடைபெற்று விடுகிறது. அரசியல் காரணங்களும்இந்த கலவரத்துக்கு உண்டு என்பதை மறுக்க முடியாது. மலேஷயமக்களுக்குஆத்திரத்தைக்கொடுக்கும் விதத்தில் சில தேர்தல்முடிவுகள் அமைத்ததும் கலவரத்துக்கு ஒரு காரணமாகியது.

### தீண்டாமை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்கள்:

X சாதி வேற்றுமையை ஒழிப்பதற்கு புதிய சட்டம் இயற்றப்படவேண்டுமென்றும், சமூக இயக்கங்கள் நடாத்தப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் இன ஒழிப்பு இயக்க முயற்சிக்கு தமிழ்மக்கள் ஏகோபித்த எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும்.

X எந்த மனிதனுக்கும் எந்த சமயத்தையும் வழிபடஉரிமை இருப்பதால், தமிழர்களை பௌத்த மதம் மாற்ற நிர்ப்பந்திப்பதை கடுமையாக எதிர்க்கிறது.

இவைசம்பந்தமாக நடவடிக்கை எடுக்க 11 பேர் கொண்ட கமிட்டி தெரிவு செய்யப்பட்டது. கமிட்டி அங்கத்தவர்கள் (1 திரு அமிர்தலிங்கம், (2) திரு. கே துரைரத்தினம் (3) எஸ். கதிரவேலுப்பிள்ளை (4) வி. தர்மலிங்கம் (5) த பெ இலங்கை மன்னன் (6) எம் ஆலாலசுந்தரம் (7) பி கதிரவேலு (8) கே நடராசா (9) எஸ் மகேசன் (10) என் ரி செலலத்துரை (11) கு நேசையா.

### விழா

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் திருவருள்தவ நெறி மன்றத்தாராதரவில் ஞானசம்பந்த சுவாமிகள் குருபூசையும், வள்ளுவர் விழாவும், பரிசளிப்பு வைபவமும் நாளை மாலை கோப்பாய்யில் நடைபெறவுள்ளன

கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவில் மண்டபத்தில் வலி கிழக்கு காரியாதிகாரி திரு. வி. கந்தப்பிள்ளை தலைமையில் இவ்விழா நடைபெறும்.

கோப்பாய் ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. கே. கணேசலிங்கம் ஆகியோர் கருத்துரை நிகழ்த்துவார்கள்.

''ஞானம் பெற்ற ஞானசம்பந்தன்'' என்னும் பொருள் பற்றிய சிவ. வை. நித்தியானந்த சர்மாவின் கதாப் பிரசங்கமும் இவ்வைபவத்தில் இடம்பெறும்.

விழாவையொட்டி நடாத்தப்பெற்ற சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பரிசில்களை வழங்குவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org